LIBRARY
PERIODICAL DIVISION

2012 ஜனவரி
அணி 08 படை 03
நன்கொடை ரூபா 20.00

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
செய்தி பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டது

உள்ளே..

இலவச கல்வியை அழித்தொழிக்கும் தனியார் பல்கலைகழக சட்டமூலம்



பக்கம் 3

அரசாங்கத்தின் ஆபத்து நிலையும் மக்களின் தயார் நிலையும்



பக்கம் 4

நட்டம் என்னும் மாயையில் சிக்கியுள்ள தேயிலை தோட்டங்கள்




பக்கம் 5

புதுவருடம் போராட்ட வருடம் தலைமை தாங்க ஜே.வி.பி தயார்..!



தோழர் ரில்வின் சில்வா பேட்டி

பக்கம் 9




# எல்லாத் தடைகளையும் தகர்த்தெறிந்து அதி உயர்வாக நடைபெற்ற ஜே. வி. பி யின் மாநாடு

## புதிய மத்திய குழு புதிய அரசியல் பிரேரணைகள் நிறைவேற்றம்

பிற்போக்குவாதிகளின் எல்லாத் தடைகளை மற்றும் சதி, சூழ்ச்சிகளையும் முற்றாக தோற்கடித்து ஜே வி பி யின் விஷேட மாநாடு திஸ்ஸமாராமை தெபரவெவ விளையாட்டு மைதானத்தில் ஜனவரி (2012 01 01) முதலாம் திகதி வெகு விமரிசையாகவும் வெற்றிகரமாகவும் நடத்தப்பட்டது கட்சியில் உருவான குழுவாத போக்கு அடியோடு களைந்தெரியப்பட்டு நாட்டிலும் சர்வதேசத்திலும் தோற்றபெற்று வரும் புதிய அரசியல் நிலைமைகளுக்கு ஏற்பவும் மக்களின் வெற்றிக்காகவும் நாட்டையும் கட்சியையும் தயார்படுத்துவதை நோக்கமாக கொண்டு இந்த மாநாட்டை கூட்டுவதற்கு ஜே வி பி யின் மத்திய குழு முடிவு செய்திருந்தது. குழுக்களாக ஜே வி பி யிலிருந்து பிரிந்து சென்ற பிரிவினர் மாநாடு ஒன்றை நடத்தும்படி ஊடகங்கள் வாயிலாக ஜே வி பிக்கு சவால் விடுத்திருந்ததுடன் பின்னர் ஜே வி பி விஷேட மாநாடடை நடத்துவதற்கு ஏற்பாடுகளை எடுத்திருந்தபோது அதற்கு எதிரான தடை உத்தரவை பெறுவதற்கு இரண்டு தடவைகள் நீதிமன்றத்தினை நாடியிருந்தனர். ஆனால் அவைகள் அனைத்தும் தோல்வியிலேயே முடிவுற்றது.

இந்த மாநாட்டில் 25 பேரங்கிய மத்திய குழுவும் மாநாட்டு அங்கத்தவர்களால் ஏகமனதாக தெரிவு செய்தனர். கடசி தலைவராக தோழர் சோமவன்ச அமரசிங்க தெரிவு செய்யப்பட்டார். நான்கம்ச புதிய அரசியல் பிரேரணைகள் இதில் நிறைவேறற்ப்பட்டது. ஜரோப்பா, மத்திய கிழக்கு, தென்கொரியா, மற்றும் ஜப்பான் போன்ற பல நாடுகளின் ஜே வி பி யின் வெளிநாட்டு கிளைகள் மாநாட்டிற்கு வாழ்த்துச் செய்திகளை அனுப்பியிருந்தமை விஷேடம்சமாகும் தெரிவுசெய்யபட்ட புதிய மத்திய குழுவின் பெயர் பட்டியலும் மத்திய குழுவால் தெரிவு செயப்பட்ட அரசியல் குழுவினரின் பெயர் பட்டியல் ம் பக்கம் வெளியாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாற்று கருத்துள்ளவர்களை ஒடுக்கும் அரசின் நடவடிக்கையை வன்மையாகக் கண்டிப்போம்

-மக்கள் விடுதலை முன்னணி-

லலித்குமார், முருகாநந்தன் குகன் இருவரையும் விடுதலை செய்வதற்காகவும் எதிரணி மற்றும் மாற்றுக் கருத்து அரசியல்வாதிகள் கடத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென அரசாங்கத்தை வற்புறுத்தி மக்கள் விடுதலை முன்னணியின் அரசியல்குழு கடந்த 13ம் திகதி வெளியிட்ட அறிக்கை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் காணாமற்போன லலித்குமார், முருகாநந்தம் குகன் ஆகிய அரசியல் செயல்பாட்டாளர்கள் இருவர் தொடர்பான தகவல்கள் இதுவரையும் கிடைக்கவில்லை என ஊடகங்கள் தெரிவித்துள்ளன. இவ்வாறான அரசின் ஜனநாயக விரோத நடிவக்கைகளை மக்கள் விடுதலை முன்னணி மிக வன்மையாகக் கண்டிக்கின்றது.

கடந்த காலங்களில் இடம்பெற்ற கடத்தல்களில் மற்றுமொரு சம்பவமாகவே இது அமைந்துள்ளது. அரச பாதுகாப்பு இருக்கமாக உள்ள யாழ்ப்பாணத்தில் இடம்பெறுகின்ற சம்பவங்கள் அரசாங்கத்தின் ஒத்துழைப்பின்றி இடம்பெறும் என்பதை நம்பமுடியாது. எனவே இக்கடத்தல் சம்பவத்தின் பின்னணியில் அரசாங்கமே இருப்பதாக சந்தேகிக்ககூடியதாக உள்ளது.

எதிரணி தொடர்பாக ராஜபக்ஷ அரசின் செயல்பாடு மிகவும் கவலைக்கிடமானதாகவே அமைந்துள்ளது. இது அரசின் தேவைக்காக சட்டரீதியாக குற்றம் சுமத்தும் சம்பவங்கள் முதல் வெள்ளை வேன் கடத்தல்வரை விரிந்து செல்கின்றது.

அரசாங்கத்திற்கு எதிரான இணையதளங்களை தடைசெய்தல், எதிர்கட்சி உறுப்பினர்கள் மீதான தாக்குதல், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு விசாரனையின்றி தடத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர், யுவதிகள், வடபகுதியில் ஊடகவியலாளர்கள் மற்றும் மாணவர்கள் மீதான தாக்குதல், கொழும்பு உட்பட நாட்டின் பல நகரகங்களில் ஆட்களை கடத்தல் போன்றவை அண்மைக்கால அரசாங்கத்தின் பலிவாங்கள் நடவடிக்கைகளாக காணப்படுகிறது.

எதிர்கருத்துகடகளை கொண்டுள்ளதன் ஒரே காரணத்திற்காக எதிர்தரப்பினரை பலிவாங்கும் அரசாங்கத்தின் ஜனநாயக விரோத நடவடிக்கைகள் அறுவருக்கத்தக்க செயலாகும். அரசியல்யமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள சுதந்திரமாக கருத்தைக்களை வெளியிடும் உரிமை தமது எதிர்தரப்பினரிடம் இருக்க முடியாத ஒன்றாகவும் அரசை எதிர்ப்பது தொடர்பாக இரண்டு தடவை யோசிக்க வேண்டும் என்பதே அரசின் நோக்கமாக உள்ளது.

நாட்டில் தொடர்ந்தும் அதிகரித்துவரும் இவ்வாறான ஜனநாயக விரோத சூழல் தமது இருப்பை பாதுகாக்கும் என்று அரச தரப்பினர் நம்புவதாக தெரிகிறது. ஆனால் உண்மையில் அரசாங்கத்தின் வங்குரோத்து தன்மையையே இது வெளிகாட்டுகிறது. மறுபுறம் அரசாங்கம் இவ்வாறு எதிர்தரப்பினரை தாக்குவது குறித்து மக்கள் எதிர்ப்பு அதிகரித்து வருகிறது. எனவே இவ்வாறான சூழ்நிலையில் லலித் குமார், முருகன் குகன் ஆகிய அரசியல் செயல்பாட்டாளர்கள் இருவரையும் உடனடியாக விடுதலை செய்வதற்கும், ஆட்கடத்தல் நாடகத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கையெடுக்குமாறு நாம் அரசை வலியுறுத்துகிறோம். அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகளை தோற்கடிப்பதற்கு அணிதிரளும்படி இந்நாட்டு அனைத்து மக்களிடமும் கோரி நிற்கிறோம்.



அரசாங்கத்தின் ஜனநாயக விரோத போக்கிற்கு எதிராகவும், வேலையில்லா பட்டதாரிகளுக்கு உடனடியாக வேலை வாய்ப்பினை வழங்குமாறும் வலியுறுத்தி வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் நடத்திய ஆர்ப்பாட்டத்தின் ஒரு கட்டம்

# பாலஸ்தீனத்தை சுதந்திரமாக வாழவிடு!






பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காக, அவர்களின் ஒருமைப்பாட்டிற்காக, மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக, உலக மக்களோடு மக்கள் விடுதலை முன்னணியும் கைகோர்த்துக் கொள்கிறது என மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளா தோழர் ரில்வின் சில்வா சுட்டிக்காட்டினார். சோஷலிச இளைஞர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த பாலஸ்தீன நட்புறவு தினத்தை முன்னிட்டு கொழும்பில் நடைபெற்ற கருத்தரங்கில் கலந் துக் கொண்டு உரையாற்றும் போதே இதனை அவர் தெரிவித்தார்.

அவ் வைபவத்திற்கு இலங்கையின் பாலஸ்தீன் தூதுவர் கலாநிதி அன்வர் அல்ஹுகா அவர்கள் பிரதம அதிதியாக கலந்துகொண்டதோடு சோஷலிச இளைஞர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் பிமல் ரத்நாயக்க, சோஷலிச மாணவர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழர் வைத்தியர் தோழர் நலிந்த திசாநாக்க ஆகியோரும் கலந்துகொண்டனர்.

ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு மற்றும் சூறையாடலுக்கு எதிராக உலகத்தில் எந்த மூலையில் மக்கள் ஆர்பாட்டம் நடைபெற்றாலும் அப் போராட்டங்களுடன் மக்கள் விடுதலை முன்னணி இரு கரங்களையும் உயர்த்தி எமது சர்வதேசத்திற்கான ஆதரவை வழங்வோமெனவும் தெரிவித்தார். இக்கட்டான நெருக்கடிமிக்க சூழ்நிலையிலும் கூட சர்வதேசத்திற்கான ஆதரவை ஒருபோதும் கைவிடவில்லை. விடுதலைப் போராட்டங்கள் மிக இலகுவாகவும் துரிதமாகவும் வெற்றி கொள்ள முடியாது என்பது நாமும் ஏற்றுக்கொள்வோம். ஆனால் அப்போராட்டங்களை அடக்குமுறையால் முடிவுக்கு கொண்டுவர முடியாது என்பதும் உண்மை. ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நடந்து கொண்டிருக்கும் பாலஸ்தீன மக்களின் விடுதலைப் போராட்டமும் வெகுவிரைவில் வெற்றிபெறும் என்பதை நாம் திடமாக நம்புகிறோம்.

1990 தசாப்த ஆரம்பகாலத்தில் ஏகாதிபத்தியத்தின் தேவைக்கேற்ப ஜெர்மனியின் பர்லின் மதில் இடித்து தரைமட்டமாக்கபட் போதிலும் தற்போது இஸ்ரவேல் கட்டியமைக்கப்பட்டுள்ள அழிவு மிக்க சுவருக்கு எதிராக ஐ.நாவின் மனிதஉரிமை வாய்த் திறப்பதில்லை. ஏகாதிபத்தியம் எவ்வளவு துரோகமானது? எவ்வளவு கொடூரமானது? முற்று முழுதான மனித வர்க்கத்திற்கும் எதிராக காட்டுமிராண்டி தனத்தை கட்ட விழ்த்தப்பட்டுள்ளதென்பது பாலஸ்தீனம் ஊடாக கற்றுக்கொள்ளலாம்.

உலகலாவிய ரீதியில் மக்கள் ஏகாதிபத்தியத்துக்கு எதிராக போராடிய வண்ணம் உள்ளனர். அதேபோன்று உலகலாவிய ரீதியில் முற்போக்காளர்கள் இப்போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கி வருகிறார்கள். *'பாலஸ்தீனை சுதந்திரமாக வாழவிடு'* என்ற போராட்டத்துடன் எமது கட்சியும் இணைந்துக் கொள்கிறது. பாலஸ்தீன மக்களின் போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணி எவ்வித நிபந்தனைகளுமின்றி ஆரம்ப காலத்திலிருந்தே ஆதரவு வழங்கி வருகிறது. அதேபோன்று பாலஸ்தீன மக்களின் விடுதலைக்காக உயிர்நீத்த வீரர்களுக்கு எமது வீரவணக்கத்தை செலுத்துகின்றோம். ஏகாதிபத்தியத்தின் தலையீட்டிற்கு எதிராக முன்மொழியப்பட்ட ஐ.நாவின் பிரேரணையை உடனடியாக நடைமுறைக்கு கொண்டுவருமாறு நாம் வலியுறுத்துகிறோம்.

தற்போது உலகலாவிய ரீதியில் ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டங்கள் கொழுந்திட்டு எரிகின்றது. டியூனீசியாவின் பென்-அலி எகிப்தின் ஹொஸ்னி முபாரக்கை இவ்வாறு பதவியிறக்கப்பட்டனர். இவ் ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியத்தின் ஆதரவை பெற்றவர்களாவர். ஏகாதிபத்தியத்தின் அழுத்தத்திற்கு எதிராக இம்மக்களின் போராட்டம் வெறுண்டெழும்பியது. ஆனால் அப்போராட்டங்கள் ஏகாதிபத்தியத்திற்கோ அல்லது முதலாளித்துவத்திகோ எதிரான போராட்டங்களாக அமையவில்லை. காரணம் அந்நாடுகளில் இடதுசாரி அரசியல் கட்சிகள் இல்லாமையாகும். எனவே, ஏகாதிபததியத்தை விரட்டியடித்து மீண்டும் முதலாளித்துவம் அதிகாரத்தை கைப்பற்றி கொண்டது. மக்கள் எதிர்பார்த்த மாற்றமோ, மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வோ அல்லது ஜனநாயகமோ கிட்டவில்லை. தம்மை பலசாலிகள் என காட்டிக் கொண்டிருக்கும் ஏகாதிபத்திய சார்பான ஆட்சியாளர்கள் சிறிய சம்பவங்கள் ஊடாக எழுச்சிபெற்ற மக்கள் போராட்டங்கள் எதிரே பதவியை விட்டு ஓடினார்கள் என்பதாகும்.

இன்று எமது நாட்டு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களின் ஏகாதிபத்திய தேவையை பூர்த்தி செய்யும் ஆட்சியை உடனடியாக தோற்கடிக்க வேண்டும். இது ஏகாதிபத்தியத்துக்கு எதிரான போராட்டமாக மட்டும் அமைய முடியாது. ஏகாதிபத்தியத்துக்கு எதிரானதோடு முதலாளித்துவத்துக்கும் எதிரான போராட்டமாக முன்னெடுக்க வேண்டும். இதை நன்கு உணர்ந்த ஓர் அரசியல் கட்சி மக்கள் விடுதலை முன்னணியாகும். 1965ம் ஆண்டிலிருந்து ஏகாதிபத்தியம் மற்றும் முதலாளித்துவத்துக்கு எதிரான போராட்டத்தையும், சர்வதேசியத்தையும் தேசப் பற்றையும் ஒன்றிணைத்து 1967 லிருந்து இலங்கைக்கு எதிரான ஏகாதிபத்திய தலையீடுகளுக்கு உரிய அரசியல் தீர்வுக்கான யோசனையை பெற்றுக்கொடுத்துள்ளது.

1948ல் எமது நாட்டுக்கு சுதந்திரம் என்ற போர்வையில் நவகாலனி சிறைக்குள் சிக்கிக்கொண்டது என நாம் மக்களுக்கு சுட்டிக்காட்டினோம். அந்த நிலைப்பாட்டில் எவ்வித மாற்றமும் இல்லை. எனவே ஏகாதிபத்தியத்திற்கும், முதலாளித்துவத்துத்துக்கும் எதிரான போராட்டத்தை ஒன்றிணைத்து மிகவும் வெற்றிகரமாக முன்னெடுக்கிறோம். அனைத்து மனித குலத்தை சுரண்டும் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் சமூக, பொருளாதார முறையை பாதுகாத்துக் கொள்வதற்கு இரண்டு சக்திகள் ஒரே தடவையில் இயங்க ஆரம்பித்துள்ளது என மிகவும் தெளிவாகக் காணலாம். மகிந்த ராஜபக்ஷ பிரதிநிதித்துவம் செய்யும் ஏகாதிபத்திய முதலாளித்துவத்தின் இடத்தை பிடிக்க ஐக்கிய தேசிய கட்சி ஒரு பக்கத்தில் செயல்படுகின்ற அதேவேளை மறுபுறம் இடதுசாரி முகமூடியணிந்த சந்தர்ப்பவாதிகள் இடதுசாரி மத்திய நிலயங்கள் நிறுவிய வண்ணம் உள்ளனர். இந்த கொட்டில்களில் அனைத்து விதமான சந்தர்ப்பவாதிகள், காட்டி கொடுப்பாளர்கள், சூழ்ச்சிதாரிகள் மற்றும் மக்கள் விரோத சக்திகள் ஒருங்கிணைகின்றனர். எவ்வளவு கடினமானாலும் இந்நிலமையை புரிந்து இச்சூத்திரதாரிகளின் மத்திய நிலயங்களை தோற்கடித்து உண்மையான இடதுசாரி இயக்கத்தின் போராட்டத்தை வெற்றிபெறச்செய்வதற்கு நாம் செயலாற்றுவோம்.

இதனை நன்கு உணர்ந்து கொண்டால் மட்டுமே சர்வதேசியத்தை வெற்றிகொள்ள முடியும். தோழர் "சே" ஒருமுறை கூறியதைப்போன்று ஏகாதிபத்தியத்துக்கு எதிரான வியட்நாம் போராட்ட நிலங்கள் ஒன்றல்ல நூற்றுக்கணக்கானவை தேவைப்படுகின்றது. அது உண்மையானது. இன்று ஆயிரக்கணக்கில் தேவைப்படுவதும் அதுதான். போராட்ட களங்களில் பாலஸ்தீனம், ஆசியா மற்றும் ஆபிரிக்கா போராட்டங்கள் ஒன்றிணைய வேண்டியதன் அவசியம் உள்ளது. ஏகாதிபத்தியத்தை உலகலாவிய ரீதியில் தோற்கடிக்க முடிவதும் இவ்வாறான சுயாதீனமான போராட்டங்கள் ஒன்றிணைவதால் மட்டுமேயாகும். சர்வதேச பொறுப்பை நிவர்த்திசெய்ய உலக வரலாற்றின் அனுபவங்களை நாம் பெற்றுக்கொள்கிறோம். இதே போன்று நான்கு தசாப்தங்களுக்கு மேலான எமது கட்சியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சக்தி

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகபூர்வ செய்தித்தாள்
464/20 பன்னிபிட்டடிவீதி பெலவத்த,பத்தரமுல்ல,இலங்கை
011-2785545, 0112785612
E-mail sensackthynews@gmail.com


## புதுவருடத்தை வாழ்த்துவதற்கு முன் உண்மையான கொலைகாரனை கண்டுபிடித்தல்

குளோபல் இசுஸ் (Global Issues) எனும் இணையத் தளம் சிறுவர்களின் மரணம் பற்றிய தரவுகள் அடங்கிய அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. அதைகாணும் மனசாட்சியுள்ள எவருக்கும் மனம் கலங்குவதற்கு அத்தகவல்கள் போதுமானதாகும். அந்த அறிக்கையின் படி வறுமை, பசி, மற்றும் இலகுவாக தடுக்க கூடிய நோய்களினால் உலகம் முழுவதிலும் ஒவ்வொரு நாளும் 21.000 ஆயிரம் சிறுவர்கள் செத்து மடிகின்றனர். அவைகளை ஒப்பீட்டளவில் கணிப்பிட்டுள்ள அந்த அறிக்கை,

01 மேற்கூறிய காரணிகளினால் ஒவ்வொரு நாளிகைக்கு ஒரு முறை உலகில் எங்காவது ஒரு பிள்ளை மரணிக்கிறது.

02 அப்படி மரணிக்கின்ற அளவு ஒரு விநாடிக்கு 14 பேராகும்.

03 அவ்வாறு ஒவ்வொரு வருடமும் 7.6 மில்லியன் சிறுவர்கள் மரணிக்கின்றனர்.

04 ஒவ்வொரு நாளும் மரணிக்கின்ற பிள்ளைகளின் தொகை 2011 லிபியாவில் யுத்தத்தினால் மரணித்த தொகைக்கு சமமாகும்.

05 இவ்வாறு ஒவவொரு 10 நாட்களில் இறக்கின்ற பிள்ளைகளின் தொகை 2010 ஹய்ட்டியில் இடம்பெற்ற நிலநடுக்கத்தின் போது இறந்தவர்களின் தொகைக்கு சமமாகும்

06 இப்படியாக ஒவ்வொரு 11 நாட்களில் மரணிக்கின்ற பிள்ளைகளின் தொகை 2004 ஆசிய கண்டத்தினை தாக்கிய சுனாமியால் இறந்த மொத்த தொகைக்கு சமமாகும்.

இவைகளை மேலும் ஆராய்ந்துப் பார்க்கும்போது உலகத்தில் பயங்கரமான அழிவுகளால் மரணிக்கும் தொகையை விட மௌனமாக மரணிக்கின்ற சிறுவர்களின் தொகை அதிகமாகும். இதற்கு அப்பால், உலகம் முழுவதிலும் தற்கொலைகளால் நோய் நொடிகள் மற்றும யுத்தத்தினால் மரணிக்கின்ற தொகைக்கு புறம்பாகவே இவைகள் அடங்குகின்றன.

கட்டாயமாக வாழவைக்க கூடிய நிலையிலிருக்கும் போது பிறக்கும் ஒவ்வெருவருக்கும் வாழும் உரிமையை ஏற்றுக்கொண்டிருக்கும் போது. இவ்வாறு ஒவ்வொரு நாளும் மரணிக்கின்ற குழந்தைகளுக்கு பொறுப்பு கூறுவது யார்? அது வேறு எவருமல்ல. தற்போதைய முதலாளித்துவ சமூக முறைமையேயாகும். தற்போதைய முதலாளித்துவம் மௌன கொளைகாரனாக மாறியிருக்கிறது.

பிறக்கும் அனைவருக்கும் சாகாமல் வாழ்வதற்கு போதுமான உணவினை பெற்றுக் கொடுக்க முடியாதென்றால், எவ்வளவு முன்னேறிய சமூகமானாலும் அது நியாயமான சமுதாயமல்ல.

இப்போது (நாற்காட்டிக்கு ஏற்ப) 2012 புத்தாண்டு பிறக்கும் போது ஒவ்வொருவரும் புத்தாண்டை வரவேற்பதையும், வாழ்த்துக்களை தெரிவிப்பதையும் காணமுடிகிறது. புத்தாண்டுக்கு வாழ்த்துகூறி வரவேற்பதில் மூலதன சொந்தக்காரர்களும் கறுப்பு சந்தை முதலாளிகளும், முதலாளித்துவ அரசியல்வாதிகளும் முன்னணி வகிக்கின்றனர். சமாதானம், சகவாழ்வு, சௌபாக்கியம், நிறைந்த புத்தாண்டுக்காக வாழ்த்துகின்றனர். ஆனால் மனிதகுலம் உண்மையில் சமாதானத்தையோ இன்பத்தையோ அல்ல யுத்தம் ஒடுக்குமுறை, வறுமை மற்றும் மௌனமான மரணத்தையே தளுவுகின்றனர். தனது பிள்ளைகளை கொல்லும் கொலைகாரர்களாலேயே மக்களை வாழ்த்தும் அபாக்கிய நிலையானது கவலைகிடமானதாகும். அதனால் முதலாளித்துவ முறையை முடிவுக்கு கொண்டுவந்தாக வேண்டும். உதயமாகியிருப்பது புதுவருடமல்ல மனித குலத்தின் எதிர்காலமும் சுபீட்சமடைவது அப்போதாகும். உலகம் முழுவதிலும் உள்ள முதலாளித்துவ ஆட்சியாளர்களும் அவர்களின் ஆலோசகர்களும் போலியான சமூக அடிவருடிகளும் எதிர்கால சௌபாக்கியத்தைப் பற்றியும், நல்லவைகள் குழந்தைகளுக்கென கூறும் போதும், குழந்தைகளுக்கு கிடைத்திருப்பது வறுமை, கல்வியின்மை, மரணம் மட்டுமேயாகும். இலங்கையின் ஆட்சியாளர்கள் ஆசியாவின் ஆச்சரியத்தப் பற்றி பேசுகின்றனர். குழந்தைகளின் நல்வாழ்வுக்காக கனவுகளை விதைக்கின்றனர். ஆனால் உண்மை கசப்பானதாகும். மேற்கூறிய இணையச் செய்தியின் படி பசி, வறுமை மற்றும் குணப்படுத்தக் கூடிய நோய்களை இலகுவாக தடுக்க முடியாததன் காரணமாக 2010ல் மட்டும் தென்னரிசியாவில் 5வயதுக்கு குறைவான 5லட்சம் பிள்ளைகள் மரணித்துள்ளனர். இதில் இரண்டாவதாக இடம்பிடித்திருப்பது ஆபிரிக்க கண்டத்தின் இறந்த பிள்ளைகளின் தொகையான 37 லட்சமாகும். ஆசியாவின் ஆச்சரியம் அப்படியானதாகும். வறுமை, பசி தீர்க்க கூடிய நோய்களால் எவராவது மரணிப்பார்கலென்றால் அது இயற்கை மரணமல்ல கொலையாகும். உலகில் இவ்வாறான மௌன கொலைகளுக்கு பொறுப்பு கூறவேண்டியவ்கள் வேறுயாருமல்ல முதலாளித்துவமாகும். முதலாளித்துவம் இப்படியாக மக்களையும், சிறுவர்களையும் கொல்லும் போது புதுவருடத்தை வரவேற்று வாழ்த்துவதென்பது தம்மைதாமே ஏமாற்றிக் கொள்வதற்கு சமமானதாகும். அதனால் இப்போது சம்பிரதாயமாக வாழ்த்துக்களை தெரிவிப்பதை விடுத்து நல்லதோர் எதிர்காலத்தை தோற்றுவிப்பதற்காக போராடவேண்டும்.

அதனை நன்கு தெரிந்துக் கொண்டு புரிந்துணர்வுடன் நடைமுறை சாத்தியமான செயற்பாடாக முதலாளித்துவத்தை தோற்கடிக்க போராடுவதன் மூலமே உண்மையான சமாதானம், வாழ்வு, உண்மையான புதுவருடமாகும். முதலாளித்துவம் இல்லாத புதிய சமூகத்திற்காக புத்தாண்டில் புதிய நடவடிக்கையை எழுப்பதற்கு துணிவோமானால் அதுவே உண்மையான புத்தாண்டின் பிறப்பாகும்.

இலங்கை பல்பலைகழகங்கள் மீண்டுமொருமுறை கொதிப்படைந்துள்ளன. மாணவர்களின் போராட்டங்கள் காராணமாக கடந்த வருடம் முழுவதும் கொதிப்படைந்து

ஆணைக்குழுவாகும். 1978ல் ஆரம்பிக்கப்பட்ட அனைத்தையும் விற்றுத்தின்னும் கொள்கையான "நவ லிபரலவாதம்" திறந்த பொருளாதாரத்தின் கீழ் மூன்று தனியார் வைத்திய கல்லூ


பல சந்தாப்பங்களில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. அந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இலங்கைவாழ் மாணவர் சமூகம் போராடி ஒரு கட்டத்தில் உயிர்த்தியாகம்

## இலவச கல்வியை அழித்தொழிக்கும் தனியார் பல்கலைகழக சட்டமூலம்

போயிருந்து பல்கலைகழகங்கள் கடந்த மே மாதம் முதல் பல்கலைகழக ஆசிரர்களின் வேலை நிறுத்தத்தின் காரணமாக மீண்டும் கொதிப்படைய தொடங்கியது. தற்போது உருவாக்கப்பட்டடிருக்கும் மாலபே தனியார் வைத்தியக் கல்லூரி மற்றும் எதிர்வரும் நாட்களில் பாராளுமன்றத்திற்கு கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள தனியார் பல்கலைகழக சட்டமூலத்தினால் மீண்டுமொரு முறை எரியப்போகிறது.

தனியார் வைத்தியக் கல்லூ ரி பற்றிய அனுபவங்கள் எமது நாட்டிற்கு நிறையவே உள்ள போதிலும் மகிந்த அரசாங்கம் முதல் தடவையாக பல்கலைகழக சட்டமூலத்தை கொண்டுவருகிறது. எமது நாட்டின் உயர்கல்வி 1978 இல

ரிகளை ஸ்தாபிப்பதற்கு ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது. தொடர்ந்து ஆட்சிபீடமேறிய சந்திரிக்கா குமாரணதுங்கவும் ஜே.ஆரினால்



எமது நாட்டின் உயர்கல்வி 1978 இல 16 கொண்ட சட்டமூலமே சட்டமாகியுள்ளது. அதில் கானப்படும் சட்டங்களுக்கு ஏற்ப 1979 டிசம்பர் 22ம் தி-கதி உயர்கல்வி நிறுவனங்களில் அதியுயர் முகாமைத்துவ, நிதி மற்றும் தொடர்பாடல் துறையாக பல்கலைகழக மானியங்களின் ஆணைக்குழு (UCG) உருவகப்படுத்தியது. இலங்கையில் தற்போது இயங்கும் அரச பல்கலைகங்கள் 15 மற்றும் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தை (NCAS) நிர்வகிக்கும் நிறுவனம் பல்கலைகழக மானியங்களின் ஆணைக்குழுவாகும். 1978ல் ஆரம்பிக்கப்பட்ட அனைத்தையும் விற்றுத்தின்னும் கொள்கையான 'நவ லிபரலவாதம்' திறந்த பொருளாதாரத்தின் கீழ் மூன்று தனியார் வைத்திய கல்லூரி-களை ஸ்தாபிப்பதற்கு அன்யை ஜக்கிய தேசிய கட்சி அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டது

முன்வைக்கப்பட்ட கொள்ளைக்கார கொள்கையின் கீழ் இலவச கல்வி உரிமையை குழிதோண்டி புதைக்கும் நடவடிக்கையையே முன்னெடுத்தது. சந்திரிக்கா பண்டாரநாயக்க போன்ற ஜனாதிபதிகளைவிட இன்று மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி அவர்கள் கல்வியை தனியார்மயமாக்கும் கொள்கையில் பலபடி முன்னெறியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது. அதாவது 2012 ஜனவரி மாதத்தில் பாராளுமன்றத்தில் தனியார் பல்கலைகழக சட்டமூலம் சமர்ப்பிக்கப்பட போவதாக உயர் கல்வி அமைச்சர் கூறுகின்றார். அந்த சட்டமூலத்தை நிரைவேற்றி தனியார் பல்கலைகழகங்களை உருவாக்கி இலவச கல்வியை நாசமாக்குகின்ற நடவடிக்கைகளுக:கு எதிராக மாணவர் சமூகம் கிளர்ந்தெழுவதை தடுப்பதை நோக்கமாக கொண்டே பேராதனை பல்கலைகழக மாணவர் பேரவை உட்பட அனைத்து பீடங்களை சேர்ந்த மாணவர் அமைப்புகளையும் தடைசெய்துள்ளார். அரசாங்கம் இன்று தனக்கும் , தாங்களால் முன்னெடுக்கப்படும் நடவடிக்கைகளுக்கு எதிராக பேசுவோர் யாரோ அவர்களை ஒடுக்குவதை குறிக்கோளாக கொண்டுள்ளது. அது முதலாளித்துவ இயந்திரத்தின் தன்மையாகும். மக்களை அடக்கி ஒடுக்கும் இயந்திரமே முதலாளித்துவ அரச இயந்திரமாகும். ஆனால் இலங்கை சமூகத்தின் அனுபவங்கள் இவர்களுக்கு அப்பாற்பட்டதாகும். 1978ம் ஆண்டு முதல் கல்வியை தனியார்மயமாக்குவதற்கும், தனியார் பல்கலைகழகம், தனியார் மருத்துவ கல்லூ ரி போன்றவற்றை நிர்மாணிப்பதற்கான

16 கொண்ட சட்டத்தின் மூலமே சட்டமாக்கப் பட்டுள்ளது. அதில் காணப்படும் சட்டங்களுக்கு ஏற்ப 1979 டிசம்பர் 22ம் திகதி உயர்கல்வி நிறுவனங்களில் அதியுயர் முகாமைத்துவ, நிதி மற்றும் தொடர்பாடல் துறையாக பல்கலைகழக மானியங்களின் ஆணைக்குழு (UCG) உருவகப்படுத்தியது. இலங்கையில் தற்போது இயங்கும் அரச பல்கலைகங்கள் 15 மற்றும் உயர் கல்விக்கான தேசிய நிலையத்தை (NCAS) நிர்வகிக்கும் நிறுவனம் பல்கலைகழக மானியங்களின்

செய்து இலவசக் கல்வியைப் பாதுகாத்துள்ளனர். இது நாள்வரையில் நமது நாட்டில் தனியார் பல்கலைகழகங்களை அமைப்பதற்கு தடையாகவுள்ள மூன்று பிரதான காரணிகள் இருந்தன. முதலாவது சட்ட ரீதியான தடை, தனியார் பல்கலைகழகங்களின் தரங்குறைந்த தன்மை தொடர்பாக மக்கள் மத்தியில் நிலவும் கருத்து, கல்வியின் பண்பு ரீதியான அம்சம் தொடர்பாக மக்கள் மத்தியில் நிலுவும் கருத்தியல், உத்தேச சட்டமூலத்தின் மூலமாக அரசாங்கம் ஒரு கல்லில் இரண்டு குருவிகள் அல்ல மூன்று குருவிகளை கொல்வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது. அ்தாவது இச்சட்ட மூலத்தின் மூலமாக சட்டரீதியான தடை நீக்கப்படுகிறது. அரச மற்றும் தனியார் பல்கலைகழகம் இரண்டையும் ஒன்றாக வைத்து கணிப்பிடுவதற்கான ஒரு சபையை அமைப்பதன் மூலமாக, மக்கள் மத்தியில் தனியார் பல்கலை கழகங்களின் தரம் தொடர்பான கருத்தியல் நீக்கப்படுகிறது. இப்படியான செப்படி வித்தையை செய்து தனியார் கல்வியை ஸ்தாபிப்பதற்கும், இலவச கல்வியை குழிதோண்டி புதைப்பதற்கும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருகிறது. தற்போது மாணவர் இயக்கம் மற்றும் நாட்டு மக்களின் முன்னால் இருக்கும் சவால் இலவச கல்வியை பாதுகாப்பதாகும். அதற்காக 2012 ஜனவரியல் பாராளுமன்றத்திற்கு கொண்டுவரவிருக்கும் தனியார் பல்கலைகழக சட்டமூலத்தை தோற்க்கடிப்பதுவதுடன், ஸ்தாபிக்கப்படவுள்ள தனியார் பல்கலைகழகங்களை அகற்றுவதுமாகும். அதற்காக மாணவர் அமைப்பு மற்றும் தொழிற்சங்கங்கள், முற்போக்கு அரசியல் கட்சிகள், மக்கள் அணித்திரண்டு போராடுவது கட்டாயத் தேவையாகும், அதைவிடுத்து வேறு மார்க்கம் எதுவும் கிடையாது. அதனூடாக மாத்திரமே இலவச கல்வி என்னும் செல்வத்தை பாதுகாத்து எமது எதிர்கால சந்ததியினருக்கு வழங்க முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அரசாங்கத்தின் ஆபத்து நிலையும் மக்களின் தயார் நிலையும்

நமது நாட்டின் எல்லா ஆட்சியாளர்களினதும் இரண்டாவது பதவிகாலமும், எல்லா ஆட்சியாளர்களினதும் இரண்டாவது ஆட்சிகாலமும், நெருக்கடிமிக்கதும் ஆபத்து நிறைந்ததுமாகும். இப்போது ராஜபக்ஷவின் ஆட்சியும் அந்த நெருக்கடிக்கும் ஆபத்திற்கும் ஆளாகியுள்ளது.

2011ம் ஆண்டு அரசாங்கம் பாரிய தோல்விகளை சந்தித்த ஆண்டாகும். உயர்தர பரீட்சை முடிவுகளை குழப்பியதன் மூலம் பாரிய மக்கள் வெறுப்பினையும், வருட இறுதியில் அரசாங்கத்தால் கொண்டுவரப்பட்ட மரகரி வியாபாரிகளுக்கான பிளாஸ்டிக் கூடை பிரச்சினை மக்களின் எதிர்ப்பின் காரணமாக தான்தோன்றித்தனமான அரசாங்கம் மக்களின் போராட்டத்தின் மண்டியிட்டது.

முதலாளித்துவ சமூக முறை நெருடிக்கடியில் அமிழும்போது, பொருளாதாரத்தில் ஏற்படும் நெருக்கடி, அரசியலிலும் நிர்வாகத்திலும், மற்றும் முதலாளித்துவ முகமைத்துவமும், முதலாளித்துவ சமூகமும், முதலாளித்துவ சட்டமும் பாரிய நெருக்கடியை நோக்கி செல்கிறது. அவ்வாறான நிலைமைகளில் நெருக்கடிக்கு போகாத, அராஜகத்தை நோக்கி செல்லாத, எந்தவொரு துறையையும் காணமடியாது. மார்க்ஸ் எங்கெல்ஸ் கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையில் குறிபிட்டவாறு "புனிதமான அனைத்தும் புனிதத் தன்மையைங இழக்கிறது" இப்போது இலங்கை முதலாளித்துவ முறையில் இடம்பெற்று வருவதும் அதுவாகும்.

தற்போது இலங்கையில உருவாகும் பிரச்சினை மற்றும் நெருக்கடிகளை அதிகாரிகள் மீது சுமத்தி கைகழுவ முயற்ச்சிக்கின்ற அமைச்சர்களும், அது தோல்விகாணும்போது அமைச்சர்கள் மீது சுமத்தி கைகழுவுவதற்கு ஜனாதிபதியும் முயற்சிப்பதை காணமுடிகிறது. நாட்டில் வளர்ச்சிபெற்று வரும் பாரிய பொருளாதார நெருக்கடியினால் நாளுக்கு நாள் பொருட்களின் விலைகள் அதிகரித்து மக்கள் மீது மென்மேலும் சுமைகள் ஏற்றப்படுகிறது. அதேபோன்று நாட்டின் கடன் சுமையும் "புளுமெண்டல் சாக்கடை மலையை" போல் நாளுக்கு நாள் உயர்கிறது. இந்த நிலைமையில் சம்பள அதிகரிப்பு, வருமானம் அதிகரித்தல் மற்றும் நிவாரணங்கள் வெறும் 'கனவாக' மாறுகிறது. அதேபோன்று வீண்விரயம் மற்றும் ஊழல் மலையேறியுள்ளது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் போது 2011 வருடம் ஜூன் மதத்தில் ஜனாதிபதியின் வாகனங்கள் இறக்குமதிக்காக ஒதுக்கப்பட்ட தொகை 379 மில்லியன் ரூபாய்களாகும். வீண்விரயமிக்க செலவுகளில் இது ஒன்று மட்டுமேயாகும். மறுபுறத்தில் தரம்குறைந்த மருந்துகளை இறக்குமதிச் செய்தல், தரம்குறைந்த சீமெந்துகளை கொண்டுவருதல், தரம்குறைந்த பெட்ரோல் கொண்டுவருதல், போன்றவற்றால் நாடு இழந்த தொகை பாரிய ஒன்றாகும். தரம்குறைந்த பெட்ரோல் இறக்குமதியால் மட்டும் ஏற்பட்ட நட்டம் 49 கோடி ரூபாயாகும். இவைகள் நிருவாகத்தில் மட்டுமல்ல, அரசியல்வாதிகளின் தலையீட்டின் பாதகமான விளைவுகளாகும்.

தற்போது இந்த நெருக்கடிகள் சமூக நெருக்கடியாக வளர்ச்சியடைந்துள்ளது. கூட்டு கொலைகள், தற்கொலைகள் பாரியளவு அதிகரித்துள்ளது. ஒரே குடும்பத்தைச் சேர்ந்து 4 - 5 பேர் வெட்டி கொத்தி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவங்கள் பல கடந்த டிசம்பர் மாதத்தில் நடந்துள்ளது. குற்றச்செயல்கள், கற்பழிப்பு மற்றும் கப்பம் பறித்தல் கடத்திசெல்தல் நாளுக்குநாள் அதிகரித்துள்ளது. இவைகள் அனைத்தும் கோடிட்டு காட்டுவது முதலாளித்துவத்தினுல் இலங்கை சமூகம் எதிர்கொண்டுள்ள கவலைக்கிடமான சம்பவங்களாகும். இவைகள் ஒன்றுக்கும் அரசாங்கத்திடம் தீர்வு இல்லையென்பதை உறுதிபடுத்தியுள்ளது. அரசாங்கம் அன்றாடம் நாளை கழிப்பது எப்படியென்பதை மட்டுமே சிந்திகிறது. அதுவும் இப்போது காலாவதியாகிவிட்டது. மக்கள் தாங்களது கோபத்தை இப்போது அரசாங்கத்தை நோக்கி நகர்த்தியுள்ளனர். அரசாங்கம் ஆபத்தை சந்தித்திருப்பது அதனாலாகும்.

கடந்த வருடம் அரசாங்கம் தோல்விகளை சந்தித்த மக்கள் வெற்றிகளை சந்தித்த இரண்டு சந்தர்ப்பங்களை காணமுடியும். அதில் ஒன்று கடந்த மே மாதத்தில் தனியார்துறை ஊழியர்களுக்காக கொண்டு வந்த ஓய்வூதிய சட்டமூலத்திற்கு எதிராக தொழிலாளர்கள் கொண்டுச்சென்ற போராட்டத்தினால் அரசாங்கம் தனது முதலாவது தோல்வியை சந்தித்தது. யார் எதிர்த்தாலும் ஓய்வூதிய சட்டமூலத்தை நடைமுறைபடுத்தியே தீருவேன் என்று ஜனாதிபதி மே தினத்தில் சூழுரைத்தார் ஆனால் அதற்கு 30 நாட்களுக்கு பின்னர் அதை வாஸ்பெறுமளவுக்கு அரசியல் அதிகாரத்தை விட மக்கள் சக்தியின் பலம் வாய்ந்ததென தொழிலாளர்கள் மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பாடம் புகட்டினர்.

தற்போது அரசாங்கத்திற்கு எதிராக தோன்றியுள்ள பாரிய நெருக்கடி உயர்தர பரீட்சை முடிவுகளாகும். இவைகளுக்கு பொறுப்பு கூறவேண்டியவர் ஜனாதிபதியாகும். ஏனென்றால் கல்வியமைச்சில் தாங்களது அரசியல் கைகூலிகளை பதவிகளில் அமர்த்தியவர் ஜனாதிபதியாகும். அப்படியான நிலைமையில் கல்வியின் தரத்தைப்பற்றி சொல்லவா வேண்டும். இப்போது மாணவர்களும் பெற்றோர்களும் அரசாங்கத்திற்கு எதிராக முகாம் அமைத்துள்ளனர். இலவசக் கல்வியை அழித்தொழிப்பதற்காக அமைச்சர் எஸ். பி. திசாநாயக்காவை பயன்படுத்திக் கொண்டு அரசாங்கம் முன்னெடுக்கும் கல்வியை தனியாாமயமாக்குவதற்கு எதிராக போராட்டத்துடன் உயர்தர பரீட்சை முடிவுகளையும் குழப்பியுள்ளதால் இவைகளுக்கு எதிரான போராட்டம் இலகுவான ஒன்றாக அமையப்போவதில்லை. இதிலிருந்து தெரிவதாவது நாளுக்கு நாள் அரசாங்கத்திற்கு எதிராக போராடும் மக்கள் சக்திகள் அதிகரிக்க காணப்படுகிறது.

இப்போது அரசாங்கத்திலிருந்து ஒதுங்கியிருப்பது மக்கள் மட்டுமல்ல. அரசாங்கத்தை இன்னமும் கட்டிபிடித்துக் கொண்டிருக்கும் அதேவேளை போகும் போக்கு நல்லதல்ல என்பதை உணர்ந்துள்ள அரசாங்கத்திலிருக்கும் அரசியல்வாதிகளும் தமது எதிர்ப்பினை வெளிபடுத்த ஆரம்பித்துள்ளனர். பாட்டலி சம்பிக்க, விமல் வீரவன்ச போன்ற அமைச்சர்கள் தற்போது வெளியிடும் அறிக்கைகளை பார்க்கும்போது இதை அவதானிகக் கூடியதாய் இருக்கிறது.

இந்த காவாலி அமைச்சர்கள் நிபந்தைனயின்றி அரசாங்கத்திற்கு ஆதரவளித்துடன், அரசாங்கத்தையும் ஜனாதிபதியையும் பாதுகாப்பதற்காக அனைத்து காவாலித்தனங்ளையும் புரிந்துவிட்டு இப்போது அரசாங்கம் கஷ்டத்தில் விழும்போது தம்மை முற்போக்கானவர்களாக காட்டிக்கொள்வதற்காக போலியான அரச எதிர்ப்பினை காட்டி மக்களை ஏமாற்ற முயளுகின்றனர். அதன் காரணமாகவே இவர்கள் காவாலி அரசியல்வாதிகளின் பட்டியலில் விழுகின்றனர்.

எபப்டியாயினும் கடந்த காலத்தில் நடைபெற்ற இரண்டு சம்பவங்களும், கடந்த காலத்தில் தோற்றம்பெற்ற நெருக்கடிகளை தோளில் சுமந்துக் கொண்டு நாளைய தினத்தில் காலடிவைக்கும்போது எழக்கூடிய பாரிய நெருக்கடிமிக்க நிலமைகள் இப்போது காணமுடிகிறது.

நாள்காட்டிக்கு ஏற்ப 'புத்தாண்டு' 2012ம் ஆண்டு பிறந்திருப்பது பழைய சவால்களுடனாகும். அதுமட்டுமல்ல அதற்கெதிராக போராடும் மக்களின் போர்குணம் அதிகரித்துள்ள நிலையிலாகும் இது நாட்டுக்கும் மக்களுக்கும் நலல் தருணமாகும். கடந்த போராட்ட வரலாற்றின் படிப்பினைகளை பெற்றுள்ள மக்களுக்கு சரியான தலைமைத்துவத்தின் தேவை அத்தியாவசியமாக உள்ளதை மக்கள் உணர்ந்துள்ளனர்.

ஒருபுறத்தில் தீர்வுகாணமுடியாத பொருளாதார நெருக்கடி, அரசியல், சமூக நெருக்கடியை எதிர்கொண்டுளள் அரசாங்கம். மறுபுறத்தில் அரசாங்கத்திற்கு எதிராக நிபந்தனையின்றி போராடும் மக்கள் அதேவேளை போலி வேடம பூண்டுள்ள அரசாங்கத்தை பாதுகாக்கும் நபர்கள் அரசாங்கத்தை போலியாக விமர்சித்துவிட்டு தம்மை பாதுகாத்துக் கொள்ளும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். இதுவே அராசங்கத்தின் ஆபத்தாக அமையப்போகிறது. முதலாளித்துவத்தின் நெருக்கடியாகும்.முதலாளித்துவ அரசாங்கத்தை போன்றே முதலாளித்துவ முறையும் ஆபத்தினை எதிர்கொண்டுள்ளது.


அரசாங்கத்தின் ஆபத்து இவ்வாறு தோற்றம் பெறுகையில் அது மென்மேலும் வளர்ச்சியடையும்போது அதை எதிர்கொள்வதற்காக மக்களின் தயார் நிலை பற்றியும் ஆராய்ந்துப் பார்க்கவேண்டும். முதலாளித்துவ அரசாங்கமும் முதலாளித்துவ முறைமையும் ஆபத்தினை எதிர்கொள்வது கெட்ட விடயமல்ல. அது நல்ல விடயமாகும். ஆனால் அது நல்லவிடயமாக மாறுவது முதலாளித்துவ முறையையும், முதலாளித்துவ அரசாங்கத்தையும் தோற்கடித்து புதியதோர் சமூக மாற்றத்தினை செய்வதற்கு மகக்ள் தயாரானால் மட்டுமேயாகும். ஏன்னெறால் அரசாங்கத்தின் ஆபத்தினுள்ளே மக்களுக்கு ஆபத்தும் இருக்கிறது. தமக்கு எதிராக தொடுக்கப்படும் எதிப்புகளை எதிர்கொளள் முடியாத அரசாங்கம் மக்கள் மீதான அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிட வாய்ப்பிருக்கிறது. இதுவே மகக்ள் எதிர்கொள்ளவிருக்கும் ஆபத்தாகும். அதேவேளை தோற்றம்பெற்றுவரும் அரச எதிர்ப்பு குறுகிய நோக்கத்திற்காக களவாடுவதற்கு அதை முதலாளித்துவ ஆட்சியாளர்களை பாதுகாப்பதற்கான நயவஞ்சகமான முறையில் மக்களை ஏமாற்றுவோர் முயற்ச்சியில் ஈடுபடுவர். முதலாளித்துவ ஒடுக்குமுறைக்கு எதிராக செய்யும் போராட்டம் அப்படியான ஆபத்தினையும் எதிர்கொண்டுள்ளது.

அந்த ஆபத்தினை தவிர்த்து தற்போதுள்ள நெருக்கடியும், அரச எதிர்ப்பினையும், அரசாங்கத்தின் மீதிருக்கும் ஆபத்தினை உண்மையான வெற்றிவரையில், அதாவது சோஷலிச சமூக மாறற்மவரையில் கொண்டுச் செலல் வேண்டுமென்றால் மக்கள் அவதானத்துடனும் திடசங்கற்பத்துடனும் இருப்பது அத்திவசியமாகும். அதுவே தீர்மாணகரமான கட்டமாகும். அதற்காக தலையிடல், மக்களை தெளிவுபடுத்தல், மக்களை தயார்படுத்தல் மற்றும் சரியான போராட்டத்திற்காக மக்களுக்கு தலைமைதாங்குமல் உண்மையான முற்போக்கு மக்கள் சக்திகளின் கடப்பாடாகும். மக்கள் விடுதலை முன்னணி சகல முற்போக்குச் சக்திகள் மற்றும் தேசப்பற்றுள்ள சக்திகள் முன்னால் இருப்பது அவ்வாறான கடப்பாடாகும் 2012ம் ஆண்டு உண்மையில் புத்தாண்டாக மாறுவது மேற்கூறிய சக்கதிகள் அனைத்தும் இப்பொறுப்பினை உணர்ந்து செயற்படுவதன் மூலமேயாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நட்டம் என்னும் மாயையில் சிக்கியுள்ள தோட்டங்கள்



உ லல்ாச பயணிகள் ஹோட்டல்களாக மாறியுள்ள தேயிலை தொழிற்சாலைகள்

தேயிலைத் தோட்ட தொழிற்றுறை என்றுமில்லாதவாறு வீழச்சியடைந்து வருகிறது. மிகவும் மோசமாக வீழ்ச்சியுறும் தேயிலைத் தொழில்துறையை மீள கட்டியெழுப்புவதற்கு கம்பனிகளோ அல்லது அரசாங்கமோ எவ்விதமான நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. அதற்கு பதிலாக கம்பனிகள் தேயலைத் தோட்டங்களை சிறு சிறு துண்டுகளாக்கி தனியார் முதலாளிகளுக்கு விற்பதற்கும் முயற்சித்து வருகின்றனர். அதன் காரணமாகவே தேயிலைத் தோட்டங்களை பராமரிப்பதை கம்பனிக்ள கைவிட்டுள்ளன. அதாவது தேயிலைத் தோட்டங்களில் வளரும் தேயிலைக் கொழுந்தை மாத்திரம் கொய்து வருகின்றனர். அத்துடன் கிழமையில் 3 அல்லத 4 நாட்களே வேலை வழங்கப்படுவதற்கு கம்பனிகள் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தற்போது பெருவாரியான தோட்டங்கள் உப குத்தகைக்கு விடப்பட்டும், விடப்படும் நிலையிலும் உள்ளன. உபகுத்தகைக்குவிடப்படும் போது குத்தகைக்கு எடுக்கும் நபர்கள் தொழிலாளர்களுக்கு கைகாசு அடிப்படையிலேயே சம்பளம் வழங்க நடவடிக்கை எடுத்துவருகின்றனர்.

அத்துடன் கொண்றக்ட் நடைமுறையும் அறிமுகப்படுத்தவிருக்கிறது. அதனால் தொழிலாளர்கள் எதிர் காலத்தில் பெரும் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க நேரிடும் அபாயம் தோன்றுகிறது.

**நட்டத்தில் இயங்கும் நிறுவனங்கள்!**

நட்டத்தில் இயங்கும் நிறுவனங்களை அரசாங்கம் பொருப்பேற்றும் என்ற நிலையில் அண்மையில் பாராளுமன்றத்துக்கு கொண்டுவரப்பட்ட சட்டமும் அதிக வாக்குகளால் வெற்றிபெற்றது. அதற்கு அதரவாக மலையக தோட்டத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெற்று பாராளுமன்றம் சென்ற மலைய மக்களின் தலைமைகள்தான் ஆதரவாக வாக்களித்தனர். அதனை சாட்டாக வைத்து அரசாங்கமும் , ஜனாதிபதியும் நட்டதில் இயங்கும் நிறுவனம் என்னும் போர்வையில் தேயிலைத் தோட்டங்களையும் முடக்குவதற்கு திட்டமிட்டுள்ளனர். அதன் முதலாவது படியாக தோட்டங்களில் உப பயிர்செய்கை மேற்கொள்ளப்படுகிறது. கருவா, இறப்பர், மரக்கறி, மற்றும் வாசனை திரவியம், மலர் வகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அதற்கு தொழிலாளர்கள் தற்காலிகமாக பயன்படுத்தப்படுகின்றனர்.

சில நிறுவனங்கள் நட்டத்தில் இயங்குவதாக கூறிய அரசாங்கம் அவற்றை பொறுப்பேற்று தற்பொது அவை வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கம்பனிகளுக:கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. அதே நிலை நாளை தோட்டப்புறங்களுக்கும் ஏற்படலாமௌ கவளை தெரிவிக்கின்றனர்.

***உல்லாச பயணத்துறைக்கு தோட்டங்கள் விற்பனை செய்தல்!***

தற்போது அரசாங்கம் உல்லாசப்பயணத்தறைக்கு வழிதிறந்து விட்டுள்ளது. அதன் காரணமாக இவ்வருடத்தில் கிட்டதட்ட 7இலட்சம் உல்லாசப்பயணிகள் வருகைத்தந்துள்ளனர். எதிர்வரும் வருடம் 9இலட்டசம் வரை உல்லாசப்பயணிகளின் வருகையை எதிர்ப்பார்ப்பதாக அரசாங்கம் கூறுகின்றது.

உல்லாசப்பயணிகளை ஈர்க்கும் இடமாக மத்திய மலைநாடு கானப்படுவதால் மலைநாட்டை அதாவது தேயிலைத் தோட்டங்களை உல்லாசப்பயணிகளுககு திறந்துவிடுவதற்கு முயன்றுவருகின்றனர்.

தற்போது நுவரெலியா மாவட்டத்தில் உள்ள சில தோட்டங்களின் தேயிலைத் தொழிற்சாலைகள் உல்லாச பயணிகளின் விடுதிகளாக மாற்றப்பட்டுள்ளனர்.

அத்தோடு சில தோட்டங்களின் தேயிலை மலைப்குதி உல்லாசப்பயணிகளின் உரைவிடங்களாக மாறியிருக்கின்றன.

தேயிலைத் தோட்டத்தில் கிடைக்கும் இலாபத்தைவிட பல மடங்கு கம்பனிகளுக்கு கிடைப்பதால் கம்பனிககள் நட்டம் என்னும் போர்வையில் உல்லாசப்பயணத்துறையை ஊக்குவிக்க தோட்டங்களை படிப்படியாக மூடிவிட எத்தனித்துள்ளது.


***தோட்டங்களை வாங்குவதில் அமைச்சர் முண்டியடிக்கினறனர்!***

தோட்டங்களை வாங்குவதற்கு வியாபாரிகளைப்போன்றே அமைைச்சர்களும் முண்டியடிக்கின்றனர். பதுளை மாவட்டத்தில் தனியாருக்கு சொந்தமான பல ஏக்கர் தேயிலை காணிகள் தற்போது அமைச்சர்களால் வாங்கப்பட்ட உல்லாசப்பயணத்துறைக்கு ஏதுவான முறையில் மாற்றியமைக்கப்படுகின்றன. திட்டமிட்டு தோட்டங்களை முடிவிட்டு அதன் பின்னர் அதன் பின்னர் தனியாருக:கு விற்பது சுலபம் என்ற காரணத்தை கண்டுபிடித்துவட்ட கம்பனிகள் நட்டம் என்பதையே சாட்டாக கொண்டுள்ளனர். அரசாங்கத்தினதும் அரசாங்க சார்புடைய தொழிற்சங்கங்களினதும் ஆதிக்கம் தோட்டத்தில் குடிகொண்டுள்ளதால் தோட்டங்கள் மேலும் பின்னடைவை சந்திக்கின்றன.


## தொழிலாளர்களின் வேலை நாட்கள் குறைப்பு

கூட்டு உடன்படிக்கை என்பது தோழிலாளாளர்களை அடகு வைக்கும் உயில். அதில் கைச்சாத்திடவர்கள் தோட்டத் தொழிலாளர்களால் வாக்களித்த பாராளுமன்றம், மாகாணசபைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டவர்கள். அதை மீறுவது பாரிய குற்றம் என்பதனால் கூட்டு உடன் படிக்கையில் வழமையை மீறக்கூடாதென்ற ஒன்றும் சேர்க்கப்பட்டுள்ளது. அதற்கு அப்பால் சென்று கம்பனிக்ள தொழிலாளர்களுக்கு 4அல்லது 3 நாட்கள் வேலையே தரமுடியும் என ஒவ்வொரு தோட்டத்து முகாமையாளர்களுக்கும் சுற்றறிக்கையை அனுப்பி வைத்துள்ளது. அதனடிப்படையில் தோட்டத்தில் தற்போது வாரத்தில் 3,4 நாட்கள் வேலையே வழங்கப்படுகிறது. ஏனைய இரண்டு நாட்களும் கைகாசு வேலையே வழங்கப்படுகிறது.

*கூட்டு ஒப்பந்தத்தையும் மீறிய கம்பனிகளின் சுற்றரிக்கை*



## தொழிலாளர்களின் குடியிரப்புகள் புனர் நிர்மானம் செய்யப்படுவதில்லை



தொழிலாளர்களின் குடியிருப்புகளை புனர்நிர்மானம் செய்வதையும், திருத்துவதையும் நிர்வாகம் முற்றாகவே கைவிட்டுள்ளதாக தொழிலாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.கடந்த காலத்தில் தொழிலாளாகளின் குடியிருப்பு (லயம்) தோட்ட நிர்வாகத்தால் சீரமைத்து தரப்பட்டது. தற்போது அவை கைவிடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றார்கள்.

வருடம் ஒன்றுக்கு வழங்கப்படும் சுண்ணாம்பு காசும் அரைவாசியால் குறைக்கப்பட்டுள்ளது. அத்துடன் குடிநீர்வழுங்கள், லயங்களை சுத்தம் செய்தல் போன்றன படிப்படியாக தொழிலாளர்களின் மீதே சுமத்தப்பட்டுள்ளன.

## 2012 வரவு – செலவில் தோட்டத் தொழிலாளர்கள் முற்றாக புறக்கணிப்பு



2012ம் ஆண்டுக்கான வரவு- செலவு திட்மிட்டவாறு வெற்றிபெற்றது. இம்முறை வருவு- செலவில் தோட்டத் தொழிலாளர்களின் அபிவிருததி தொடர்பாகவோ அவர்களின் கல்வி, சுகாதாரம், போசாக்கு, வீடமைப்பு தொடர்பாக எவ்வித யோசனைகளும் முன்வைக்கப்படவில்லை.

தொழிலாளர்களின் வாழ்வை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகளை மலையக அமைச்சர்கள்கூட அரசாங்த்திடம் முன்வைக்கவில்லை. அத்துடன் வரட்சி, வெள்ள நிவாரணங்கள் மற்றும் சம்பள உயர்வு விடயத்தில் அரசாங்கம் தலையிடல் போன்ற சாதாரண விடயங்களகூட முன்வைக்கப்படவில்லை. 2012 வரவு-செலவில் முழுமையாகவே தோட்டத் தொழிலாளர்கள் கைவிடப்பட்டுள்ளர்கள்.

## தொழிலாளர்களின் உழைப்பை சுரண்ட வெலிஓயா தோட்டத்தில் இராணுவம் தலையீடு

தோட்டத் தொழிலாளர்களின் வேலைப்பழுவை அதிகரிப்பதற்கு தோட்ட நிர்வாகங்கள் முயன்று வருகின்றன. அதாவது கொழுந்து 20கிலோ வரையும் ஆண் தொழிலாளர்கள் மேலதிகமான நேரம் வேலை செய்யவும், நாட் சம்பளத்தை குறைப்பதற்கும் எதுவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நிர்வாகம் கொடுக்கும் அழுத்தத்தினால் தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்படும் அபாயம் தோன்றியுள்ளது. அதன் காரணமாக தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டத்தில் குதித்துள்ளனர். தொழிலாளர்களின் ஆர்ப்பட்டத்தையடுத்து நிர்வாகங்கள் கென்யா மற்றும் இந்திய தொழிலாளர்களின் உழைப்பை காரணம் காட்டுகின்றது. கென்யாவில் 44 கிலோவும், இந்தியாவில் 27 கிலோ பச்சைத் தேயிலை கொழுந்து பறிப்பதாக கூறுகின்றது. கென்யா,இந்தியாவில் அத்தயாவசியப் பொருட்களின் விலைகள், தொழிலாளர்களின் நலன்புரி சேவைகள் இலங்கைவிட மேலானதாக இருப்பதை அவர்கள் மறந்து விட்டார்கள்.

தொழிலாளர்களை அடக்கியொடுக்குவதற்கு நிர்வாகம் இராணுவம், அமைச்சர்களைக் கொண்டு அடக்குவதற்கு திட்டங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. நிர்வாகத்தின் அடாவடித்தனத்தால் மலையகம் ஆர்ப்பட்ட களமாகமாறும் நிலை கானப்படுகிறது. அதன் ஒரு கட்டமாக அட்டன் வெலிஓயா, மற்றும் கொட்டியாகல தோட்டங்களில் தொழிலாளர்கள் போராட்டத்தில் இறங்கியுள்ளனர். அவர்களை ஒடுக்குவதற்கு இராணுவம் வரவழைக்கப்பட்டுள்ளது. பொகந்தலாவ தோட்டத்தில் பொலிசார் தொழிலாளர்களை மிரட்டி வேலைவாங்குவதாகவும் அதன் பின்னணியில் மலையக மக்களின் பிரதிநிதிகள் இருப்பதாகவும் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு கிழக்கில் ச
# ஸ்தாபிக்கப்பட

## -சகோதரத்துவத்தின் மக்கள் அரண்-

கிழக்கின் உதயமும், வடக்கின் வசந்தமும் வடக்கு கிழக்கில் வாழும் மக்களை நிம்மதியாக வாழ விடுவதாக இல்லை. வசந்தம் என்ற பெயரில் அரை இராணுவ ஆட்சியும்,
ஜனநாயக உரிமை மீரல்களும், அப்பாவி தமிழ் மக்களின் நிலங்கள் பகிரங்கமாக சுவிகரிப்பும், கடத்தலும் காணாமல் போதலும் குறைந்தபாடில்லை. அதைத்தான் அரசாங்கம் வசந்தம் வீசுவதாக கூறுகின்றது போலும் வடக்கில் வாழும் மக்கள் வசந்தத்தை சுவாசிக்க முடியாத நிலைமைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளது. ஆசியாவின் அதிசயமிக்க நாடாக மாற்றுவோம், இப்படி கூறுகின்றது அரசாங்கம் உண்மையில் அதிசயம் மட்டுமல்ல ஆச்சரியமும்கூடதான் அபிவிருத்தி என்னும் போர்வையில் வடக்கு கிழக்கில் வளங்கள் தனியாருக்கு விற்பனை, ஆச்சரியம் என்னும் போர்வையில் கலாச்சார சீரழிவுகள், பொருளாதார மீட்சி என்னும் பெயரில் மக்கள் மீது வரிச்சுமை, ஜனநாயகம் என்னும் போர்வையில் அடக்குமுறை இவை அனைத்தும் அதிசயம் மட்டுமல்ல ஆச்சரியமும்கூடதான். ஆசியாவை மட்டுமல்ல உலகையே திரும்பிப்பார்க்கச் செய்யும் ஆச்சரியம். இந்த விகாரமிக்க அதிசயத்திற்கு எதிராகவும், மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காகவும்,
டிசம்பர் மாதம் 10ம் திகதி மனித உரிமைகள் தினம்,
"சகோதரத்துவத்தின் மக்கள் அரண் "என்னும் அமைப்பு உருவகம் பெற்றுள்ளது. அவ்வமைப்பின் இணைப்பாளர் பாராளுமன்ற உறுப்பின் தோழர் சுனில் ஹந்துன்நெத்தியும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் இராமலிங்கம் சந்திரசேகர் உட்பட வடக்கு கிழக்கை பிரதிநிதித்துவம் செய்யும் பல முக்கிய உறுப்பினர்கள் நிறைவேற்றுக்குழுவீல் உள்ளடங்கியுள்ளனர்.

***நோக்கம்***

*முப்பது ஆண்டுகால் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணங்களில், பாதிப்புக்குள்ளாகியுள்ள வடக்கு கிழக்கு மாகணங்களின் சாதாரண மக்களின் வாழ்க்கையை மீண்டும் ஸ்தாபிப்பதற்கும் அம்மாகாணங்களில் வாழ்கின்ற மக்களின் ஜனநாயகம, சமத்துவம், சமசந்தாப்பம் என்பவற்றை உறுதிப்படுத்தும் பொருட்டும் இத்தேச த்துக்கு உரித்தான சிங்கள, தமிழ் முஸ்லிம் ஆகிய இனங்களுக்கிடையே சகோதரத்து வத்தையும், ஒற்றுமையையும் கட்டியெழுப்புவதற்காக போராடுதல்.*

*இன அடிப்படையில் பிரித்தொதுங்குகின்ற அனைத்துவிதமான பாரபட்சங்களையும் தோல்வியுறச் செய்து இலங்கை நாட்டைக்கட்டியெழுப்புவதற்கு ஜனநாய கத்தையும், மனித உரிமைகளையும் ஸ்தாபித்து சிவில் நிர்வாகத்துக்கு இடமளித்து, அகதி முகாம்களையும் அகற்றி அரை இராணுவ ஆட்சியை முடிவுறுத்துவதற்கு நிர்ப்பந்திக்கின்ற மற்றுமு் மக்களின் காணிகள் சூரையாடப்படுவதற்கு எதிராகச் செயற் பட்டு சிங்கள, தமிழ் , முஸ்லிம் ஆகிய இனங்களுக்கிடையே உண்மை யான சகோதரத்துவத்தையும், சமத்து வத்தையும் ஏற்படுத்துவதற்காகத் தலைமை தாங்குவதற்காக அமைக்கப்பட்ட அமைப்பாகும்.*

*இந்நோக்கத்தை அடைவதற்காக செயலா ற்றுகின்றப்போது வட மாகாணத்தில் வவுனியா, கிளிநொச்சி, மன்னார், யாழ்ப்பாணம், அம்பாறை, போன்ற மாவட்டங்கள் உள்ளிட்ட நாட்டடின் அனைத்து பிரதேசங்களிலும் வாழ்கின்ற மக்களின் உரிமைகளை வெற்றி கொள்ளும் பொருட்டு எமது அமைப்பு போராடும்.*

*நாட்டின் எந்தவொரு பிரதேசத்திலும் வாழுகின்ற எந்தவொரு மக்களுக்கும் தேசியத்துவம், மொழி, மதம் என்பவற்றின் அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படுவதற்கு எதிராக எமது அமைப்பு போராடும். அவர்களுக்காக போர் குரல் எழுப்பப்படும். இதனூடக சமத்துவம், சகோதரத்துவம் என்ற பிணைப்புடன் போராடுவோம்.*

வடக்கு கிழக்கில் யுத்தம் முடிவடைந்து இரண்டரை வருடங்களுக்கு பின்பும் அரை இராணுவ ஆட்சியை கொண்டு நடாத்தி மக்களை துன்புறுத்துவதாக ***'சகோதரத்துவத்தின் மக்கள் அரண்'*** அமைப்பு அரசாங்கத்தை குற்றஞ்சாட்டியுள்ளது. வடக்கில் நிகழும் ஏதேச்சதிகார அரச பயங்கரவாதத்துக்கு எதிராக மக்களின் அடிப்படை மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் மற்றும் சிவில் நிர்வாகத்தை மீண்டும் நிலைநாட்டும் நோக்கில் பாராளுமன்றத்துக்குள்ளும் ,வெளியேயும் குரலெழுப்ப போவதாகவும் மற்றும் வீதிப்போராட்டங்களில் ஈடுபடவுள்ளதாகவும் அவ்அமைப்பு தெரிவித்தது.



சகோதரத்துவத்தின் மக்கள் அரண் அமைப்பின் இணைப்பாளரான மக்கள் விடுதலை முன்னணியின் பா.உ. தோழர் சுனில் ஹந்துன்நெத்தி சர்வதேச மனித உரிமைகள் தினமான டிசம்பர் 10ம் திகதி சகோதரத்துவத்தின் மக்கள் அரண் அமைப்பை அறிமுகப்படுத்தி வவுனியா நெல்லி ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போதே இக்கருத்துக்களை தெரிவித்தார்.

செய்தியாளர் மாநாட்டின் போது இவ்வமைப்பின் இணை இணைப்பாளர் மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் பா.உ. தோழர் இ.சந்திரசேகர் உட்பட கனகசபை நடராஜா, எஸ்.எம்.எஸ்.விஜேரத்தின, பிள்ளையாம்பழம் சிறி ஜெயசித்திரா, ஆதாம்பாவா செய்யது மொகமட் புகாரி, மொகமட் ஜமீல் மொகமட் ராவுப், சின்னதுரை இராஜேந்திரன், வை.ஜே. அலோசியஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அங்கு மேலும் கருத்து தோழர் சுனில் ஹந்துன்நெத்தி, வடக்கு கிழக்கில் வாழும் மக்கள் முகம்கொடுக்கும் உண்மை நிலையை நாட்டின் முன் பகிரங்கப்படுத்தி மீண்டும் யுத்தமொன்று உருவாகாதிருப்பதற்கு அவர்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கும், உண்மையான சகோதரத்துவத்துடன் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒன்றிணைந்து உரிமைகள் வென்றெடுப்பதாலும் நியாயமான முறையில் உரிமைகள் மற்றும் சலுகைகள் சகலருக்கும் சமமாக சென்றடையகூடிய விதத்தில் சமூக, பொருளாதார முறையின் அவசியத்தைப் பற்றியும், அதற்காக மக்கள் அணைவரும் ஓரணியில் திரளும்படியும், தமது அமைப்பு இது தொடர்பாக தொடர்ந்தும் போராடுவதாகவும் கூறினார். போன்றவை சகோதரத்துவத்தின் மக்கள் அரண் அமைப்பின் குறிக்கோள்களாய் உள்ளது என இச் செய்தியாளர் மாநாட்டின் போது கருத்து தெரிவிக்கப்பட்டது.

1) தனிநபர் சுதந்திரத்தை மீள ஸ்தபிக்க அர்ப்பணிப்புடன் செயலாற்றுதல்.

2) அரசில் கைதிகளை விடுதலை செய்தல்.

3) இடம்பெயர்ந்தோரை துரிதமாக மீள்குடியேற்றல்.

4) இரண்டு மாகாணங்களிலும் இராணுவ முகாம்கள் அகற்றி சிவில் நிர்வாகத்திற்கு உள்ள தடையை நீக்குதல்.

5) தடுப்பில் உள்ள அரசியல் கைதிகளின் அடிப்படை உரிமைகளுக்காக போராடுவதும் அவர்களின் பெயர்களை பகிரங்கப்படுத்துவதற்காக அரசை வற்புறுத்துதல்.

6) வடக்கு கிழக்கு மக்களின் கலாச்சார அடையாள தனித்துவத்தை பாதுகாத்தல்.

7) அம்மாகாண மக்களின் காணிகளை அரசு அபகரிப்பதை,பலவந்தமாக பயன்படுத்துவதை எதிர்த்து போராடுவதும் இவர்களின் காணி உரிமையை உறுதிப்படுத்த போராடுதல்.

8) இடம்பெயர்ந்தோரின் காணி உரிமைகளில் உள்ள சிக்கலை நீக்கி, ஸ்தீரப்படுத்தி துரிதமாக இவர்களை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ல் சிவில் நிர்வாகம் ப்பட வேண்டும்!

## அரண் – அமைப்பு அரசை வலியுறுத்தல்




குடியேற்றுவதற்காக அரசை வற்புறுத்துதல்.

9) அனைவருக்கும் தொழில் செய்வதற்கான உரிமையைக்காக போராடுதல்

10) கல்வி, சுகாதாரம் மீண்டும் உரிய முறையில் வழங்குவதற்கு அரசை வற்புறுத்தல்

11) இளைஞர்கள், பல்வேறு துறைகளில் ஈடுபட்டுள்ள மற்றும் ஊடகவியலாளர்கள், சமூக மற்றும் அரசியல் நடவடிக்கைகளுக்குள்ள இடையூறுகளுக்கு எதிராகவும் அவர்களின் உரிமைகளுக்காக போராடுதல்.

12) யுத்தத்தால் பெற்றோர்களை இழந்த பிள்ளைகளுக்கும், விதவைகளுக்கும் நஷ்டஈடு பெற்றுக்கொள்வதற்கும் அவர்களின் பாதுகாப்பிற்காக செயல்படுதல்.

13) யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பொதுமக்களின் உடமைகளுக்கு நஷ்டஈடு பெற்றுக்கொள்வதற்காக ஆதரவு வழங்குதல்.

**சகோதரத்துவத்தின் மக்கள் அரண்** அமைக்கப்பட்டிருப்பது வட கிழக்கு வாழ் மக்களின் பிரச்சினைகளுக்குக் குரல் கொடுப்பதோடு நின்றுவிடாமல் வடக்கு கிழக்கு மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சிகைளை தெற்கில் வாழும் சிங்கள் முஸ்லிம், மற்றும் மலையக மக்களிடம் எடுத்துச் செல்லும் சகோதரத்துவத்தின் உறவுப் பாலமாகவே செயற்படும். இதுநாள் வரையில் நமது நாட்டில் ஆடசிபீடமேறிய அனைத்து ஆட்சியாளர்களும் மக்கள் முகம் கொடுக்கும் உண்மையான பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கு இனங்களுக்கிடையே குரோத மனப்பான்மையை வளாத்தனர்.

அதன் காரணமாக தமிழர்களின் பிரச்சினைகள் சிங்களவர்களுக்கும் சிங்களவர்களின் பிரச்சினை தமிழர்களுக்கு அதேபோன்று முஸலிம் மக்களுக்கு தெரிந்துக் கொள்ளும் வாய்ப்பிற்கு தடைபோட்டிருந்தனர். அத்தடையை தகர்தெரிவற்கு கடந்த காலத்தில் முடியாது போயுள்ளது. காரணம் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் இனவாதத்தையும் சிங்கள அரசியல்வாதிகள் சிங்கள இனவாதத்தையும் முஸ்லிம் அரசியல்வாதிகள் முஸ்லிம் இனவாதத்தையும் விதைத்தார்களே தவிர மக்களிடையே ஒற்றுமை சகோதரத்துவத்தை கட்டியெழுப்பவில்லை அவைகளை தகர்தெறிந்து இலங்கையரை கட்டியெழுப்புவதே எமது பிரதான நோக்கமாகும்.

## நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள்




சின்னத்துரை ராஜேந்திரன்
– கிளிநொச்சி–

தற்போது வன்னி மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். கல்வித்துறை மிகவும் மோசமான நிலையில் கானப்படுகின்றது. தொழில்வாய்யப்பில்லாது மக்கள் பெரும் கஷ்டப்படுகின்றனர். தனிநபர் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. பாதுகாப்பின்மையால் பெண்கள் பகலில் கூட வீதியில் செல்லமுடியாத நிலை. சுருங்கக்கூறின் சமூதாயத்தின் விடுதலைக்கு சமூக மாற்றம் அவசியம். அதை சமூகத்திற்கு எடுத்துக் கூறுவதே எமது அமைப்பின் நோக்கம்.



எஸ்.எம்.எஸ். விஜேரத்தின
சட்டதரணி அநுராதபுரம் –

மக்கள் ஜனநாயக காற்றை சுவாசிக்க முடியாது திணறுகின்றனர். நீதி சட்டத்திக்கு அடிபணிந்து கிடக்கிறது. அடாவடித்தனம் கோலோச்சுகிறது. மக்கள் அச்சத்தின் மத்தியில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பாதுகாப்ப எட்டாக்கணியாகிவிட்டது. வடக்கில் ஜனநாயகம் என்னும் மாயை ஆட்சியே நடை பெறுகிறது.




ஓ. ஜே. அலோசியஸ்
–வவுனியா–

தற்போது மக்கள் சந்தோஷமாக வாழக்கூடிய சூழல் இல்லை. யுத்தம் முடிவுற்ற பின்னர் மக்கள் எதிர்பார்த்த எவையும் கிட்டவில்லை. போலியான வாக்குறுதிகளும், ஏமாற்றுகளும் நிகழந்தவாறேயுள்ளது. விசேடமாக வடபகுதிவாழ் தமிழ் மக்கள் சகலவற்றையும் இழந்த நிலையில் வாழுகின்றனர்.



தில்லையம்பலம் ஸ்ரீ ஜெயசித்திரா
– வவுனியா–

யுத்தகாலத்தித்தில் கடத்தப்பட்ட எமது உறவுகள், சகோதரார்கள் இன்னும் வீடுவரவில்லை. அரசாங்கம் இதற்கு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை. எம்மை போன்ற பல ஆயிரக்கணக்காக பெண்கள் கவலையும் கண்ணீருமாகவே வாழ்க்கையை நடத்த வேண்டிய நிலை கானப்படுகின்றது. பெண்களுக்கு பாதுகாப்பில்லை. அராஜகம் ஆட்சி செலுத்துகிறது. அசாதாரணத்துக்கு முடிவைக்கட்ட அரசாங்கத்தால் முடியவில்லை.



கனகசபை நடராஜா
யாழ்ப்பாணம்

வடக்கின் வளமிக்க செல்வங்கள் வெளியாரால் கொண்டு செல்லப்படுகிறது. காணிகள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்படுகிறது. மீள்குடியேற்றம் என்ற பெயரில் மக்கள் வதைபடுகிறார்கள். மக்களின் சொத்துகள் கேள்வி கேட்பாரன்றி கடத்தப்படுகின்றன. கிளிநொச்சியில் யுத்தகாலத்தில் கைவிடப்பட்ட நிலையில் கிடந்த மக்களின் வாகனங்கள் இரும்பு விற்பனைக்கு கொண்டு செல்லப்பட்டுகிறது. மக்கள் மௌனிகளாக்கப்பட்டுள்ளார்கள். கடல்வளம் இந்தியாவால் விட்டுவைக்கவில்லை.



ஆதம்பாவா செய்யது
மொஹமட் புஹாரி
– சம்மாந்துறை –


முதலாளித்துவ ஆட்சியாளர்களின் அடாவடித்தனம் இலங்கை சமூகத்தை கலாச்சாரம், பண்பாடு ரீதியில் சீரழித்து வருகிறது. மக்கள் கலாச்சார சீரழிவில் இருந்து மீள முடியாது அதற்கே பலியாகின்றார்கள். முதலாளித்துவ அரசால் இதற்கான விடையை மக்ளுக்கு வழங்க முடியாது. தீர்வு சமத்துவமான சமுதாய அமைப்பிலேயே கிடைக்கும் என்பது ம்டும் உண்மை.



மொஹமட் ஜலீல் மொஹமட் ரவூப்
– மட்டக்களப்பு–

கிழக்கு மாகாணத்தில் விசேடாமக கடற்றொழில்துறை மிகவும் பாதிப்படைந்துள்ளது. கடற்றொழிலுக்கு தேவையான மண்ணெண்ணெய் நிரப்பும் நிலையம், ஐஸ்மோல் என்பன இல்லை. அரசாங்கம் அவற்றை நிவர்த்தி செய்ய எவ்வித் நடவடிக்கையும் எடுக்கவில்லை.

அதே போன்று மீள்குடியேற்றம் பெயரலவில் நடைபெற்றதே தவிர மக்களின் நலன்கருதி மக்களுக்கு தேவையான விதத்தில் அல்ல. மக்கள் எதிர்பார்ப்பு வீணடிக்கப்பட்டிருக்கிறது.



அம்பலவானர் கணபதிபிள்ளை
யாழ்ப்பாணம்

இறுதி யுத்தத்தில் சிக்குண்டிருந்த நிலையைவிட மிகவும் மோசமான அச்ச நிலை மக்களிடம் நிலவுகிறது, அழிவில் இருந்து மீழப்போவதாக கண்ட கனவு கலைந்துவிட்டது. வடக்கில் விதவைகளும், அநாதரவற்ற சிறுவர்களும் சமூகத்தில் இருந்து ஒதுக்கப்பட்டுள்ளனர். பொருளாதார ரீதியில் சிக்குண்ட வடக்கிற்கு ஏது வசந்தம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரகம்மன (கேகாலை) மலையடிவாரத்தின் நினைவுகள் ...





(2011 சோஷலிஸ இளைஞர் சங்கத்தின் இளைஞர்களின் முகாம் பற்றி எழுதப்பட்ட சிறு குறிப்பு)


அங்கு கட்டெறும்புகளைப் போன்றதொரு சுறுசுறுப்பு பானப்பட்டது. வருகைத்தந்திருந்த எல்லோரினதும் முகங்களில் புதுவிதமன எதிர்ப்பார்ப்பு ஏக்கமும், எதிர்ப்பார்ப்பும்!வடக்கில், தெற்கில், மேற்கில், கிழக்கில்,மலையகத்தில் நாட்டின் நலாதிசைகளிலிருந்தம் இருந்து வருகைத்தந்திருந்த தோழர்,தோழியாகள் ஒருவனை-யொருவர் அறிமுகமாக்கிக் கொண்டிருந்தனர். தாங்கம் முகம் கொடுத்த அருவறுப்பான அனுபவங்களை தோற்கடிக்கும் திடசங்கற்பம் அம்முகாம்களில் நிறைந்து காணப்பட்டது.இடையிடையே மழைத்தூறல்களால் உடல் நனைய.. இளந்தென்றல் உள்ளத்தையும் வருடிச்சென்றது மட்டுமல்ல. இருண்ட வானில் கண்சிமிட்டும் மின்மினிகளைப் போல் இளைந்த இளமனசுகளின் ஒப்பனைகளையும் தொட்டுச்சென்றது. சிட்டுக்குருவிகள் சிறகடிக்கத் துடிப்பதுபோல் ஆனந்த பரவசம். பரவசத்தை உச்சுமுகர்ந்து பிரசவத்தின் பின்னர் மழலையை முத்தமிடும் உணர்வு கலந்த அந்த நிமிடம். ஆம் அதுதான் பரகம்மன மலைத்தொடர். பரகம்மன கிராமத்தை கேகாலை நகரம் அரவணைத்தே வைத்திருந்தது. தாயும்,சேயும் போல.. புதியதோர் அனபவத்தோடு.



டிசம்பர் மாதம் 17ம் திகதி நண்பகல் மணவரைக்குச் செல்லும் நிகழ்வைப்போல் , நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின. நம்பிக்கை, பரிந்துணர்வு, திடீர் முடிவுகளை எடுக்கும் கூட்டு முயற்சியை பற்றியும்,கூட்டுறவைப் பற்றிய ஆச்சரியமான உணர்வுகளை தோற்றுவித்த குழுக்களின் செயற்பாடுகளில், எம் எல்லாருக்கும் நிறையவே கடமையிருப்பது போன்ற உணர்வு, நிகழ்ச்சிகளை தொகத்து வழங்கிய தோழர்களால் முடியுமாயிருந்தது.
உலகத்தை ஆழ்வது சிந்தனையா? இந்தக் கேள்வி எம் எல்லோரினதும் எண்ணங்களில் முட்டிமோதும் சிக்கலான பிரச்சினை. அந்த சிக்கலை இலகுவாக்ககி மனித மூலையில் அதன் அளவும் செயற்பாடுகளைப் பற்றியும் வைத்திய விஞ்ஞான ரீதியிலும், சமூக விஞ்ஞான ரீதியிலும் தெளிவினை ஏற்படுத்திக் கொள்வதற்கு அடுத்த சொற்பொழிவு யாருக்கும் பேருதவியாக அமைந்தது. பேய்,பிசாசுகளுக்கு இனிமேல் எவரும் அஞ்சமாட்டார்கள் என்பது மட்டும் உறுதி.
சனீஸ்வரனின் வாகனம் காகம். யாருக்காவது சனிதோஷம் ஏற்ப்பட்டால் நாய், காகம் தானம் கொடுப்பது காகத்திற்கு சக்தியைப் பெற்றுக்கொடுப்பதாகும். அதாவது சனீஸ்வரனை சுமந்து வேகமாக பறப்பதற்கு. பென்ஸ் கார்களில் வந்து டை,கோர்ட் அனிந்த பெருசுகள் முச்சந்தியில் கா..கா.. என கரைந்துக்கொண்டு காகம் ,நாய் தானம கொடுக்கும் இவர்களுக்கு இந்தக்கதை தெரியுமானால், அதாவது திருமணம முடிப்பதற்கு, குழந்தைகளை பெறுவதற்கான சாத்திரத்திற்கு ஏற்ப சூத்திரங்களைப் போடுவதெப்படி? என்று காரிருளின் மத்தியில் கண்சிமிட்டிய மின்விளக்குகள் சாட்சியாக நடத்திய சொற்பொழிவில் யாருக்கும் புரிந்துபோனது. அது மாத்திரமல்ல கண்கட்டி வித்தைகளில் எம்மை எப்படியெல்லம் ஏமாற்றுகின்றார்கள் என்ற யதார்த்தமாக நடைமுறையில் செய்து காட்டினர்.
ஏப்றாஹிம் டி கோவூர் என்னும் அதிசிறந்த பொருள்முதல்வாதி பற்றி இன்னும் வெளிப்படையாகவுள்ளஅவரது சாவல் பற்றிய பெருமை எல்லோர் மனதிலும் ஆழமாக பதிந்தது. தீ மித்தல், தீ பந்தங்களால் உடல் முழுவதும் ஓடுகின்ற ஆச்சரியம் தொடர்பான விஞ்ஞானத்தை நடைமுறையில் பரிந்து கொள்வதற்கு தீ மிதித்த யாருக்கும் முடியுமாயிருந்தது. இரா போசனத்திற்கான நேரம் வரும்போது தத்துவத்தின் ஆழமான கற்கைநெறியான பொருள்முதல்வாதம் பற்ற விரிவான புரிதலை யாவரும் உணரக்கூடியதாயிருந்தது.
இரா போசனத்தின் பின்னர்தான் அழகிய இரவு மங்கை இளைஞர் சங்கத்தின் சங்கீத ரீங்கரத்தின் உச்சம். கூடியிருந்த இளைஞர், யுவதிகளின் குரல்கள் ஒன்று கலந்தன, சிங்களத்திலும், தமிழிலுமட்டுமல்ல ஆங்கிலத்திலும்கூட. ஆம்.. நாம் யாவரும் சர்வதேசவாதிகளாகிவிட்ட உண்மையான உணர்வு, உன்னத பிணைப்புகள் ஒவ்வொருவரையும் சகோதரத்துவ விலங்ககளால் இறுக்கியது.
அதன்பொதுதான் அடுத்த நிகழ்வு அருமையாக அரங்கேறியது. “சுண்ணாம்புக்கட்டி” என்னும் மேடை நாடகம். அலைகள் கரையை முத்தமிடுவதைப் போல்.. பதுளை மாவட்டத்தின் தோழர், தோழியாரால் மேடையேற்றப்பட்டது. கொடிய யுத்தத்தத்திற்குள் மறைந்திருந்த தோழர், தோழியர்களின்வாழ்க்கையில் எமது சமூகத்தில் காணாத உண்மை கதையை அவர்கள் சத்தமிட்டுக் கூறினர். அதன்போது அனைவரின் கண்களிலும் கண்ணீர் மழ்கியது. இதயங்கள் வேதனையின் சுமைதாங்கிகளாகின. இவைகளின் மத்தியில் இரவு நடுநிசியை தொட்டுக்கொண்டிருந்து யாருக்கும் புரியவில்லை. 18ம் திகதியும் நிறையவே தேவைகள் இருப்பதால் விருப்பமின்றியும் கலை நிகழ்ச்சிகள் முடிவுக்கு கொண்டுவரப்பட்டது.
மறுநாள் சோர்வினை கவனத்திலெடுக்காத அனைவரும் அதிகாலையில் துயிலெழுந்தனர். மழைத்துழிகளாலும், பணிமூட்டத்தாலும் மூடிக்கொண்டிருந்த விளையாட்டு மைதானம் உற்சாகமான பூமியாக மாறுவதற்கு வெகு நேரம் பிடிக்கவில்லை. போராடும் தன்மை மற்றும் சமத்துவம் என்பவற்றை உயர் நிலையில் வெளிக்காட்டியது. இந்த அனுபவமானது பரஸ்பர உறவுகளையும், புரிந்துணர்வினையும் விரிவுபடுத்த பெரும் பங்காற்றியது.




அடுத்ததாக நல்லதோர் உலகத்தை அமைப்பது எம் எல்லோரிடமும் உள்ள அழகிய நோக்கத்தை யதார்த்தமாக்குவதற்கு நாம் என்ன செய்ய வேண்டும் என்ற கேள்வியை பற்றி கல்வியில் தத்துவார்த்த ரீதியாகவும் கற்றுக்கொள்வதற்கு தேவையான வழிகாட்டலை கட்சியின் பொதுச்செயலாளர் பெற்றுக்கொடுத்தார். சோஷலிஸத்தை உருவாக:குவது பற்றி, அச்செயற்பாட்டிற்கான உபாய மார்க்கங்கள் பற்றி சில குழுக்கள் உருவாகியிருக்கும் பொய்யான கருத்துக்கள் பற்றி விரிவான கருத்தாடல் வழங்கப்பட்டது. மார்க்ஸ், ஏங்கள்ஸ் போன்றே நமது பேரன்புக்குறிய தோழர் ரோஹன விஜேவிர எம்மத்தியில் இருக்கின்றார் என்ற உணர்லு எமக்கு தோன்றியது.
பகல் போசனத்தின் பின்னர் இயற்கையின் வனப்பினை தரிசிப்பதற்கு காட்டின் மரம். செடி,கொடி மத்தியில் சென்று கடினமான காரியத்தை ஆய்வு செய்தோம். கஷ்ட்டமான பிரச்சினை குருதி உருஞ்சும் அட்டைகளில் இருந்து தப்புவதுதான். எவ்வளவுதான் தத்துவார்த் பிரச்சினைகளை தெரிந்துக்கொண்ட போதிலும் அவைகளை சரியாக நடைமுறையில் செய்வதென்பது கஷ்ட்டம்தான், இந்த சிறிய உதாரணமும் கலந்துரையாடப்பட்டது.
மாலை தேனீர் இடைவெளியின் பின் அல்மீட்ரா குகையிலிருந்து மோனாலீஷா ஊடாக நிகழ்காலம் வரையில் கலைகள் ஓடும் விதம்பற்றி கலையம்சமிக்க கலந்துரையாடல் நடைபெற்றது. கலை வானத்திலிருக்கும் எதேச்சையான ஒன்றென கூறும் கூறுவோருக:கு விஞ்ஞான ரீதியிலான விடை இக்கலந்துரையாடலில் கிடைத்தது. அதன் பின் இலங்கையின் முன்னணி கலைஞருடன், அதாவது ஜயலத் மனோரத்ன அவர்களுடன் கலை தொடர்பான இரசனைமிக்க கருத்தாடல் செய்வதற்கு எல்லாருக்கும் அரிய வாய்ப்பு கிடைத்தது. கலை,இலக்கிய கற்புலத்தைக் கொண்டு சமூகத்திற்கு ஆற்றக்கூடிய பற்றிய கருத்தாடல் உணர்வுபுர்வமாக இருந்ததை குறிப்பிட்டேயாக வேண்டும்.
மனோ அண்ணனின் குரல் அனைவரின் நெஞ்சங்களையும் ஆற்பரித்துக்கொண்டது. புஸ்கின், டோல்ஸ்டோய்,தொஸ்தெவ்ஸ்கிகள் போன்ற இலங்கை கலைஞகள் அனைவரும் அருகில் இருப்பது போன்ற உணர்வு தோன்றியது.




உலகம் முழுதும் கொடிபோல் படர்ந்து செல்லும் இளைஞர் போராட்டத்தை பற்றி தோழர் பிமல் ரத்நாயக்க முன்வைத்த கருத்துக்கள் சர்வதேச போராட்டத்தின் ஜீவகுணத்திற்கு மேலும் உரமூட்டடியது.
சோஷலிஸ இளைஞர் சங்கத்தின் முகாம் முற்றுப்பெறும்போது 18ம் திகதி நடுநிசியைக்கடந்திரந்தது. அனைவரின் மத்தியில் இருந்த எதிர்பார்ப்புகள், முயற்சிகள் , வெற்றிக்கொண்ட புதிய வீரம், புதியதோர் வாழ்வும் ஒன்றுதிரட்டி ஒருங்கிணைத்த இரண்டு நாட்களும் முடிவுற்றது. சோஷலிஸ இளைஞர் சங்கத்தைப்ப பற்றியும், எமது கட்சியான மக்கள் விடுதலை முன்னணியைப்பற்றியும் எல்லோரினது மனதிலும் மிகவும் இறுக்கமாகவே இடம்பிடித்துவிட்டது உறுதியானதாகும். நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெற மனமில்லாத பிரியாவிடையொன்றை அனைவரும் தற்காளிகமாக வரவேற்கவேண்டியதாகியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# புதுவருடம் போராட்ட வருடம் தலைமை தாங்க ஜே.வி.பி தயார்..

**- தோழர்.ரில்வின் சில்வா-**

செஞ்சக்தி- 2012 வருடம் ஆரம்பிக்கும் போது மக்கள் விடுதலை முன்னணி முதலாம் திகதியில் விசேட மாநாட்டை நடாத்துவதற்கு முடிவெடுத்துள்ளீர்கள் அது ஏன்?

தோழர் ரில்வின் சில்வா- நாம் 2011 பெப்ரவரி 10ம் திகதி எமது கட்சியின் 06வது தேசிய மாநாட்டை நடாத்தினோம். எமது கட்சியில் பொதுவாக மாநாடுகளை நடாத்துவது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை. இதற்கேற்ப 7வது தேசிய மாநாட்டை 2015ல் நடாத்த வேண்டியுள்ளது. ஆனால் விசேட விடயங்களுக்காக 2012ல் ஜனவரி 01ம் திகதி விசேட மாநாட்டை நடாத்த தீர்மாணித்துள்ளோம். அண்மைக் காலத்தில் எமது கட்சியில் குழுவாதம் மேலெழத் தொடங்கியது. இக்குழு கட்சியின் நிலைபாட்டுக்கு மாறான நிலைபாட்டிலிருந்து பல்வேறு கருத்துக்கள் அமைப்பின் கொள்கைக்கு மாறாக பகிரங்கப்படுத்தினர். இது குறித்து கட்சிக்குள் கலந்துரையாடிக் கொண்டிக்கும் தருவாயில் அதாவது கடந்த செப்டெம்பரில் இக் குழு பகிரங்கமாகமே கட்சிக்கு மாறாக செயல்பட்டது. இச் சூழலில் விசேட மாநாட்டை நடாத்த வேண்டும் என்ற முடிவுக்கு கட்சியின் மத்தியகுழு முடிவெடுத்தது. கட்சியிலிருந்து வெளியேறிய மத்திய குழு உப்பினர்களும் கலந்துகொண்ட தருவாயிலேயே இம் முடிவு எடுக்கப்பட்டது. இதற்கேற்ப இம்மாநாட்டை ஜனவரி 01ம் திகதி நடாத்துவதற்கு முடிவெடுத்ததும். ஒருகாரணம்.

மற்ற விடயம் எமது நாடடின் முதலாளித்துவ ஆட்சி இன்று பாரிய நெருக்கடிக்கு முகம் கொடுத்து வருகின்றது. இந்நாட்டு மக்கள் முன்னாலும், எமக்கு முன்னாலும் பல சவால்கள் காணப்படுகின்றது. முதலாளித்துவத்தின் தாக்கத்திற்கு எதிராக நாட்டு மக்கள் பல்வேறு இடங்களில் கண்டன ஆர்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர். எனவே எதிர்வரும் வருடம் போராட்டமிக்க வருடமாகும் என நாம் நினைக்கிறோம். அப்போராட்டங்களுக்கு இடது சாரி தலைமைத்துவம் வழங்கி அதை மக்களுக்கான வெற்றியாக்கி கட்சியின்



வழிகாட்டலோடு வர்க்கத்தையும் அணிதிரட்ட வேண்டும். எனவே விசேட மாநாட்டை நடாத்த இதுவும் ஒரு காரணம் என்ற படியால் எதிர்கால சவால்களுக்கு முகம் கொடுக்க கூடிய வகையில் கட்சியை தயார்படுத்த வேண்டியதோடு அதற்கான புதிய அரசியல் யோசனைகள், புதிய திட்டங்கள் அதேபோன்று புதிய மத்திய குழுவை நியமிக்கவும் நாம் எதிர்பார்க்கிறோம்.

இவை இம்மாநாட்டை கூட்டுவதற்கான முக்கிய விடயங்கள்.

செஞ்சக்தி- இம்மாநாடு ஜனநாயகத்திற்கு மாறானதென்று கட்சிலிருந்து விலகிச் சென்ற குழு குற்றம் சுமத்துகின்றது. இது குறித்து உங்கள் கருத்து?



தோழர் ரில்வின் சில்வா- இது முற்றிலும் பொய்யான கருத்தாகும். நாம் இம் மாநாட்டை கட்சியின் யாப்புக்கு இணங்க ஜனநாயக ரீதியாகவே நடாத்துகின்றோம். இது குறித்து நாம் கட்சியிலிருந்து வில கிச் சென்ற அனைவருக்கும் பதிவுத் தபால் கடிதம் மூலம் அறியத்தந்துள்ளோம். சிங்கள, தமிழ், ஆங்கில தேசிய பத்திரிகைகளில் இது தொடர்பாக அங்கத்தவர்களுக்கு அறிவதற்கு விளம்பரம் செய்துள்ளோம். தேர்தல் ஆணையாளருக்கு உத்தியோகப்பூர்வமாக அறியத்தந்துள்ளோம். வேறு என்ன செய்ய வேண்டும்.? இதுவே ஜனநாயக ரீதியாக மாநாடு நடாத்தும முறை. இவ் விடயங்களை அறியாத, மாநாட்டின் ஜனநாயகத்திற்கு அஞ்சுகின்ற, குழுக்களை நிர்மாணித்துக் கொண்டவர்கள் கூறும் பொய்களை நாம் கவனத்தில் கொள்ளமாட்டோம். நாம் கட்சியின் மாநாட்டை நடாத்த முடிவெடுத்திருந்த சந்தர்ப்பத்திலும் நாட்டை ஏமாற்றுவதற்காக கட்சியிலிருந்து வெளியேறி மாநாட்டை கோரி நின்றனர். தற்போது மாநாட்டை நடாத்த தயாராகும் போது பொய் வதந்திகளை பரப்புகின்றனர். இவ்வாறு அவர்கள் நடந்து கொள்வது மாநாடோ அல்லது ஜனநாயகம் தேவைப்படுவதால் அல்ல இதற்கு விருப்பமில்லாத படியால்.

செஞ்சக்தி- எவ்வாறாயினும் இம்மாநாட்டை நடாத்துவது பதவிகளை தக்கவைத்து கொள்வதற்காகவும் மாநாட்டுக்கு செல்ல முடியாத ஓர் மூலையில் நடாத்துவதாகவும் போன்ற குற்றச் சாட்டுகள் இவர்கள் எழுப்புகின்றனர்?

தோழர் ரில்வின் சில்வா- இந்தக் குழு கட்சியிலிருந்து வெளியேறிச் சென்றதிலிருந்து ஊடகங்களுக்கு இவர்கள் கூறிய விடயங்களை வரிசைப்படுத்தி பார்த்தால் யாருக்கும் சிரிக்கத் தூண்டும். அந்தளவுக்கு முன்பின் முரணானதாகும். ஆரம்பத்தில் மாநாடொன்றை கோரினார்கள், தற்போது மாநாடு தவறானதென்று கூச்சலிடுகின்றனர். இம்மாநாடு திஸ்ஸமகாராமையில் நடாத்துவதில் என்ன தவறு? நாம் 1995ல் விசேட மாநாட்டை தங்காலையிலேயே நடாத்தினோம். கொழும்பில் மாநாடுகளை நடாத்தும் போது திஸ்ஸ மகாராம, ஹம்பாந்தோட்டை மக்களுக்கு கொழும்புக்கு வர முடியுமென்றால், ஏன் இவர்களுக்கு திஸ்ஸமகாராமைக்கு செல்ல முடியாது. இவர்கள் விரும்புவது கொழும்பு - 07 கருவாதோட்டத்தில் வைக்கும் மாநாட்டுக்கா? இவை அர்த்தமில்லா கதைகள்.

மறுபுறம் பதவிகளை தக்கவைத்துக்கொள்வதற்கே இம்மாநாட்டை நடாத்துகிறோம் என்று கூறுவதும் நயவஞ்சகத் தன்மையாகும். எமது கட்சியில் ஒருபோதும் பதவிகள் தொடர்பான பிரச்சினை இருக்கவில்லை. இடதுசாரி இயக்கங்கள், புரட்சிகர இயக்கங்கள் பதவிகளை ஒருபோதும் பிரச்சினைகளாக்கிக் கொள்ளவில்லை. ஆனால் இவர்களுக்கு பதவிகள் தொடர்பான மனநோய் உள்ளதை இவர்கள் நடந்துகொள்ளும் விதத்தில் காணலாம். எமது கட்சியில் உள்ளவை பதவிகள் அல்ல பொருப்புகளே ஆகும். இப்பொருப்புகளை. கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்ற மாநாட்டின்போதே எம்மிடம் ஒப்படைக்கப்பட்டது. இவற்றை இன்னும் 05 வருடங்களுக்கு எமக்கு பொருப்பேற்றிருக்கலாம் எனவே பதவிகள் தொடர்பான பிரச்சினை எமக்கில்லை. ஆனால் பதவிகளை பெற்றுக்கொள்ளும் பேராசை கட்சியிலிருந்து விலகிச் சென்றோருக்குள்ளதென எமக்கு தெரிகின்றது. எவ்வாறாயினும் இவர்கள் சுமத்தும் குற்றங்கள் விடையழிக்க வேண்டிய மட்டத்தில் இல்லை என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். எனவே அவர்கள் தாம் விரும்பும் பொய்களை சுமத்த இடமளித்து நாங்கள் எமது காரியங்களில் ஈடுபடுகின்றோம்.

செஞ்சக்தி: நாடு முகம்கொடுத்துள்ள பல்வேறு நெருக்கடிகள் குறித்து குறிப்பிட்டீர்கள். இது குறித்து விளக்கினால்?

தோழர் ரில்வின் சில்வா- இத்தருணத்தில் அனைத்து முதலாளித்துவ உலகமும் பாரிய சரிவிக்குள்ளேயே உள்ளது. 2008ம் ஆண்டு செப்டெம்பரில் அமெரிக்காவில் ஆரம்பித்த பாரிய பொருளாதார பின்னடைவு இன்னும் ஐரோப்பா முழுவதும் பரவிவருகின்றது. இதன் கட்டாய பாதிப்பு எம்மை போன்ற பின்தங்கிய முதலாளித்துவ நாடுகளை கடமையாகத் தாக்கும். தற்போது எமது நாட்டிலும் பாரிய பொருளாதார நெருக்கடி உள்ளது. இச் சூழலில் அரசு ஏகாதிபத்தியத்துக்கு தேவையான வகையிலேயே நடந்துகொள்கின்றது. கடந்த வரவு-செலவு திட்டத்தை சமர்பித்த அரசு ரூபாயின் பெருமதியை 3% த்தால் கீழிறக்கியது. அது ஏன்? அரசு கூறியது இதனூ டாக எமது ஏற்றுமதி மேலுயரும் என்று. ஆனால் எமது நாட்டில் ஏற்றுமதியை விட இறக்குமதியின் தொகை அதிகம். இதனால் ரூபாயின் பெருமதியை கீழிரக்குவது நாட்டுக்கு பாதிப்பையே ஏற்படுத்துகின்றது. இது மட்டுமல்ல எமது நாட்டுக்கு பெற்றுகொண்டுள்ள வெளிநாட்டு கடன்தொகையை ரூபாயில் கணக்கெடுக்கும் போது தானாகவே 3% த்தால் அதிகரிக்கின்றது. எனவே அரசு ரூபாயின் மதிப்பை குறைத்தது நாட்டுக்கு நலனை செய்வதற்கல்ல. நாணய நிதியத்தை ஆறுதலாக்கவே ஆகும். அதேபோன்று அரசு நாட்டின் காணிகளை விற்கின்றனர். கடதாசித் தொழிற்சாலை குறைந்த விலைக்கு அவுஸ்திரேலியாவுக்கு விற்கப்பட்டது. எமது கல்வியை தனியார்மயப் படுத்துவதற்கு தொடர்ந்தும் செயல்படுகின்றனர். இதற்கு எதிராக மாணவர்கள் ஆர்பாட்டம் செய்யும்போது மாணவர் இயக்கங்கங்களை அடக்குமுறை செய்கின்றனர். மாணவர் சங்கங்களை தடைசெய்கின்றனர். நபர்களை கடத்திச் செல்கின்றனர். எதிர்தரப்பினகளை பலிவாங்குகின்றனர். அதேபோன்று அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரிக்கின்றனர். இவை அனைத்து விடயங்களுக்கும் எதிராக மக்கள் மத்தியில் அரசாங்கத்துக்கு எதிராக விமர்சனம் அதிகரித்து வருகின்றது. அது தாம் முகம் கொடுக்கும் எந்தப் பிரச்சினையில் வெடிக்கிறது. அப்போராட்டங்கள் வெறுமனே வெடித்து செல்ல இடமளியாமல் அவற்றுக்கு உரிய தலைமைத்துவம் வழங்க வேண்டியுள்ளது. இவற்றுக்கு பங்களிப்பு வழங்குவதே எம்முன் உள்ள சவாலாகும்.

10ம் பக்கத் தொடர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09ம் பக்கத் தொடர் புதுவருடம்..

செஞ்சக்தி- அரசாங்கம் பலம்வாய்ந்தாகவும் எதிர்கட்சி தரப்பினரின் பலம்குறைந்துள்ளதாக எப்பொழுதும் கூறப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் சவால்களை வெற்றிகொள்ள மக்கள் விடுதலை முன்னணியால் முடியுமா?

தோழர் ரில்வின் சில்வா- அரசு பலம்வாய்ந்ததாகவும் எதிர்கட்சி தரப்பினர் பலம்குறைந்ததாகவும் பார்வைக்கு அப்படி தோன்றினாலும் உண்மை அதுவல்ல. அரசின் பலத்தைவிட பொதுமக்களின் பலம் அதிகம். மிகவும் பலம்வாய்ந்தென கூறிக்கொள்ளும் அரசாங்கங்களை அடிபணியவைத்து வெற்றிகளை பெற்றுக்கொள்ள அண்மையில் இரண்டு தடவைகள் மக்களுக்கு முடிந்தது. ஒன்று கடந்த மே மாதத்தில் தனியார் துறைக்கு சுமத்தப்பட்ட போலி ஓய்வூதிய பிரேரணையை கொண்டு வந்த சந்தர்ப்பம். அத்தருணத்தில் அதற்கு எதிராக வீதிகளில் ஆர்பாட்டம் செய்த பொருளாதார வலயத்திலுள்ள தொழிலாளர்கள் அரசின் அடக்குமுறையை கவனத்தில்கொள்ளாது போராடி வெற்றிகொண்டனர். அதன்போது மக்கள் விடுதலை முன்னணி ஆதரவும் தலைமையும் வழங்கியது.
அவ்வாறே அண்மையில் மரக்கறி மற்றும் பழவகைகள் போக்குவரத்துக்கு பிளாஸ்டிக் கூடைகளை கட்டாயப்படுத்திய சந்தர்பத்தில் அதனால் பாதிப்புற்ற மக்கள் வீதிக்கு இறங்கி போராடினார்கள். அதற்கும் மக்கள் விடுதலை முன்னணி எமது பங்கையும் தலைமைத்துவமும் வழங்கினோம். அப்போராட்டமும் வெற்றிகொண்டது.
அந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் மக்கள் விடுதலை முன்னணி சிறிய கட்சி பலமிழந்துள்ளதென யாரும் கூறவில்லை. எனவே போராடும் மக்களுக்கு இவ் அரசாங்கள் தோற்கடிக்க முடியும் என நாம் ஆழமாக நம்புகிறோம். அதேபோன்று மக்கள் போராட்டங்களுக்கு தலமைத்துவம் வழங்க முடிவதும், வழங்க வேண்டியதும் மக்கள் விடுதலை முன்னணியே என நாம் நம்புகிறோம். அதற்காக நாம் செயல்படுவோம்.

செஞ்சக்தி- நன்று இக் குறிக்கோள்களை பூர்த்திசெய்ய புதுவருடத்தில் உங்களது கட்சி எடுக்கவுள்ள செயல்பாடுகள் என்ன?

தோழர் ரில்வின் சில்வா- 2012ம் ஆண்டு புதுவருடமாவது கலண்டருக்கு ஏற்ப மட்டுமே ஆகும். அப்படியின்றி பார்வைக்கு இருப்பது பழைய முதலாளித்துவ அரசாங்கமே ஆகும். பழைய பிரச்சினைகளும், சவால்களும் ஆகும். எவ்வாறாயினும் புதுவருடத்தில் மக்களது பிரச்சினைகளும் சவால்களும் இன்னும் அதிகரிக்கும். எனவே போராட்டங்களும் இன்னும் அதிகரிக்கும். இதற்கு தயாராகுவதற்கும் வர்க்கத்தை தயார்படுத்துவதற்கும் பல்வேறு நடவடிக்கைகளை எடுப்பதற்கு நாம் எதிர்பார்க்கிறோம். நாம் நடாத்தும் விசேட மாநாடும் இதில் ஓர் அங்கமாகும். நாம் எமது கட்சியை எல்லாவிதமான சந்தர்ப்பவாத குழுக்களின் தாக்கத்திலிருந்து விடுவித்து சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். கட்சியை பலம்வாய்ந்ததாக கட்டியெழுப்ப நடவடிக்கையெடுக்க வேண்டியுள்ளது. அதேபோன்று பொதுமக்களின் திசையிலிருந்து வரும் போராட்டங்களுக்கு தலமை தாங்குவதற்கும் பொது மக்களை போராட்டங்களுக்கு உள்ளடக்குவதற்காக பரந்த வெகுஜன இயக்கமொன்றை கட்டியெழுப்ப வேண்டும். இது மக்கள் விடுதலை முன்னணியின் தலமையில் நிலைநாட்ட வேண்டிய அதேவேளை உண்மையாகவே பொதுமக்களை கவரக்கூடிய பரந்தளவிலான வெகுஜன அமைப்பாக வேண்டும். நாட்டிலுள்ள அனைத்து சோஷலிசவாதிகளுக்கும், அரசாங்கத்தை எதிர்க்கும் முற்போக்காளர்கள், தேசப்பற்றாளர்களுக்கு ஒன்றாக போராடக் கூடிய வெகுஜன இயக்கத்தை நிலைநாட்ட வேண்டும். இதற்காக பங்காற்றுவது எமது பொருப்பாகவுள்ளது. எமது எதிர்கால குறிக்கோள்கள் செயல்பாடுகள் இவையே ஆகும். வர்க்க போராட்டத்தின் நேரடி அனுபவங்கள் அண்மைக்காலங்களின் சமுதாயத்தில் உருவெடுத்த அனைத்து சந்தர்ப்பவாதங்களையும் குழுவாதங்களை தோற்கடித்து உண்மையான அரசியலை பாதுகாத்து கொள்வதற்கு முடிந்த மக்கள் விடுதலை முன்னணிக்கு மேலே குறிப்பிட்ட சவால்கள் வெற்றிகொள்வது கடினமான செயல் அல்ல என்பதையும் இக் காரியத்திற்காக அனைத்து மக்கள் தரப்பினரும் எம்முடன் கைகோர்த்து கொள்ளுங்கள் எனவும் அழைப்பு விடுக்கிறோம்.

## 2012 வருடத்தை சுபமான வருடமாக்கிக் கொள்வோம்!
### - மக்கள் விடுதலை முன்னணி-

இலங்கைவாழ் மக்கள் 2012வருடத்தில் அடியெடுத்து வைப்பது பல சவால்களுக்கு முகம்கொடுத்த வண்ணமாகும். மலர்ந்த புத்தாண்டில் அனைவரையும் வாழ்த்துகிறேன் என்று சம்பரதாயமாக வாழ்த்துவதால் புதுவருடம் சுபமாகாது. எனவே நம் எதிரே உள்ள சவால்களை நன்கறிந்து அவற்றை வெற்றிகொள்வதற்கான புதிய அரசியல் பயணத்திற்கு உட்பிரவேசிக்க வேண்டும். 2012ம் ஆண்டில் உரிய மற்றும் புதிய அரசியல் முடிவுகளை எடுப்பதற்காக இலங்கை வாழ் மக்கள் புத்திசாதுாரியமாக வேண்டும். துணிச்சலுடன் தீர்மானங்களை எடுக்க வேண்டும். அவ்வாறு நடந்தால் மட்டுமே உண்மையாகவே "புதிய" மற்றும் "சுபமான" வருடமாக மாற்றிக் கொள்ள முடியும்.
வரலாற்று முழுவதும் பல்வேறு வாழ்த்துக்களால் ஆரம்பிக்கப்பட்ட அனைத்து புதுவருடங்களிலும் இந்நாட்டில் பெரும்பாலான மக்களுக்கு சுபமானதா அமையவில்லை. அதற்கு பதிலாக மக்கள் ஏமாற்றப்பட்டனர், பாதிக்கப்பட்டனர், துயரத்திற்கும் வேதனைக்கும் உட்படுத்தப்பட்டனர். தற்போது 2012ம் வருடம் உதயமாகுவதும் சுபமான எதிர்காலத்திற்கான சுபமான அறிகுறிகளுக்கு பதிலாக இருண்ட மற்றும் கவலைகரமான எதிர்காலத்துக்கான துர்பாக்கிய அறிகுறிகளை சுமந்த வண்ணம் ஆகும். உண்மை இதுவே. இலங்கைவாழ் மக்கள் 2012ம் ஆண்டிற்கு காலடி வைப்பது வானுயரச் செல்லும் விலைவாசியுடனாகும். மின்கட்டணம் அதிகரிப்பதனால் அதன் விளைவுகள் மக்கள் மீது சுமத்துவதற்கு உள்ள சந்தர்ப்பத்திலாகும். ஊழியர்களின் சமபள உயர்வு, மற்றும் வருமானங்கள் தொடர்பாக இருந்த அனைத்து எதிர்பார்ப்புகளும் முறிந்த நிலையிலாகும். நாட்டின் பொருளாதாரம் ஏகாதிபத்தியத்துக்கும் புதிய லிபரல்வாதக் கொள்கைகளுக்கு இரையாக்கியுள்ள சந்தர்பத்திலாகும். பொதுமக்களை கடனாலிகளாக்கப்பட்டு நாட்டில் கடன்சுமை இன்னும் அதிகரிக்கப்படும் சூழலில் ஆகும்.
இவை மட்டுமல்ல, இவற்றுக்கு மத்தியில் எதிர்கால சந்ததியினரை இருட்டுக்குல் தள்ளுவதற்கான இலவசக் கல்வியின் சாவு மணி ஒலித்த வண்ணமுள்ளது. இலவச சுகாதாரச் சேவை குழிதோண்டி புதைத்த வண்ணம் உள்ளது. நாட்டின் இயற்கை வளங்கள், பொருளாதார மர்ம நிலயங்களை உலக பலசாலிகளுக்கு தாரைவார்த்துக் கொண்டுள்ளனர். இந்நிலமைகளுக்கு எதிராக குரலெழுப்பும் தரப்பினரை அடக்கு முறைசெய்து ஜனநாயகத்தை இல்லாதொழிக்கின்றனர்.
மறுபுறம் யுத்தம் முடிவடைந்ததன் பின் உறுவாகிய நிலமையை பயன்படுத்தி உண்மையான தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்புவதற்கு பதிலாக இருப்புக்காக மீண்டும் இனவாதத்தை போஷிப்பதற்கு முயற்சியெடுதது வருகின்றனர். வடக்கு, கிழக்கு மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குக் கூட தீர்ப்பு வழங்குவதை தலக்கணமாக நிராகரித்து வருகின்றது. இதனால் அடிப்படை மனித உரிமைகள் அனுபவிப்பதுகூட சவாலாக உள்ளது.
இவ்வாறான நிலமையில் உதயமாகும் புதுவருடம் சுபமாகும் என நினைப்பது எவ்வாறு? எனவே புதுவருடம் சுபமாகும் வரை பொருத்துக்கொண்டிருக்காமல் புதுவருடத்தை சுபமானதாக்கிக் கொள்வதற்கு திடசங்கட்பம் பூணுவோம். வெறுமனே வாழ்த்துக்களில் மட்டும் நின்றுவிடாமல் நம் எதிரே உள்ள அனைத்து நெருக்கடிகளையும், பிரச்சினைகளுக்கு பதில் கூறுவேண்டிய இந்த அநீதிமிக்க, கொடூரமான சமுதாய முறையை மாற்றியமைத்து புதியதோர் சமுதாயத்தை நிர்மாணிக்கும் அரசியல் பயணத்திற்கு மாறுவதால் மட்டுமேயாகும்.
போலி சுதந்திரத்திற்கு பின்பு கடந்த சுமார் 64 வருடங்களாக பெற்று கொண்ட அனுபவங்களை கவனத்தில் கொண்டு முகங்களை மாற்றும், வர்ணங்களை மாற்றும் தட்டுமாற்று அரசியலை முடிவுக்கு கொண்டு வந்து புதிய சமுதாயத்தை நிலைநாட்டும் புதிய அரசியல் போராட்டத்திற்காக புதிய தீர்மாணத்தை எடுப்பதற்காக இப்புதிய வருடம் நாம் அனைவரையும் வற்புறுத்துகின்றது. எனவே நெருக்கடிக்கு சென்றுள்ள, மக்களுக்கு எந்தவகையான புதிய வெற்றிகளை பெற்றுகொடுக்க முடியாது என மீண்டும் மீண்டும் உறுதிபடுத்தியுள்ள இந்த துர்நாற்றமுள்ள பழைய சமுதாய முறையை அதனுடனுள்ள அனைத்து குப்பை கூழங்களுடன் வீசியெறிந்து நவீன செழிப்பானதோர் சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்காக முன்னோடிகளாக செயல்படுவேண்டும். போராடவேண்டும். புது வருடத்தை உண்மையாகவே புதுவருடமாக்குவதற்கு முடிவெடுங்கள் என அனைத்து தரப்பு மக்களிடமும் கோரிநிற்கும் நாம் 2012ல் உதயமாகும் இத்தருணத்தில் வாழ்த்துகிறோம்.


## கியூபா புரட்சி நீடூழி வாழ்க!

*1959 ஜனவரி 01 – 2012 ஜனவரி 01*



சோவியத் யூனியனில் நாம் கண்ட வரலாறறு உண்மை காணப்பட்டது. ஆனால் கியூபாவில் ஸ்டாலினிசம் காணப்படவில்லை. அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யப்படவில்லை, உத்தியோகபூர்வ நிழற் படங்கள் காணப்படவில்லை. தனிப்பட்ட தேவைகளடங்கிய கலாச்சாரம் இங்கு காணப்படவில்லை. நாம் எப்பொழுதும் தனிப் பட்ட தேவைகள் அடங்கிய கலாச்சாரத்துக்கு எதிராக போராடினோம். எமக்கு நாம் செய்யாத தவறுகளுக்கு விடைகான நேரிட்டது. இங்கு பலவந்தமான ஒன்றுசேர்ப்புகள் காணப்படவில்லை. நாம் அனைவரும் ஒரு கோட்பாட்டுக்கு மறியாதை செலுத்தினோம். சோஷலிசத்தை கட்டியெழுப்புவது புதிய சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு விரும்பும் மக்களாகும்.
"புரட்சி, புரட்சியினாலேயே பாதுகாக்கப்பட வேண்டும்" அப்போதே புரட்சி பாதுகாக்கப்படும். எமக்கு அணுஆயுதங்கள் உள்ளதால் அல்லது நாம் பணம் படைத்தவர்கள் என்றதால் பாதுகாப்பாக இருக்க முடியாது. நாம் 46 வருடங்களாக பொருளாதாரத் தடைகளுக்கு முகம் கொடுத்தோம். பல்வேறு துன்பங்களுக்கு இடையூறுகளுக்கு முகம் கொடுத்தோம். பொது மக்களின் அரசியல் விருப்பமின்றி ஒருபோதும் இவ்வாறு நடக்க முடியாது.

## மீண்டும் அமுலுக்கு வரும் மரக்கரி கூடையின் இரகசியம் என்ன?



மரக்கறி மற்றும் பழங்களை ஏற்றிச் செல்ல பிளாஸ்ரிக் கூடைகளை இலகுவாக பெற்றுக் கொடுக்கும் முறை தொடர்பில் ஆலோசனை நடத்தி வருவதாக கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெனாண்டோ தெரிவித்தார்.
இது குறித்த விவசாயத்துறை அமைச்சுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படுகிறது. கடன் அடிப்படையில் விவசாயிகளுக்கு பிளாஸ்டிக் கூடைகளை பெற்றுக் கொடுக்கும் திட்டத்தை விஸ்தரித்தல் தொடர்பாக பேச்சுவார்த்தையில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.
அடுத்த மாதம் 15 ஆம் திகதி தொடக்கம் பிளாஸ்ரிக் கூடைகளை உபயோகிப்பது கட்டாயமாக்கப்படவுள்ள நிலையில், அதற்கு முன்னர் நிவாரணம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
சீனாவின் பிளாஸ்டிக் குப்பைகளை இலங்கையில் கொட்டுவதற்கு மஹிந்தா கும்பல் என்ன பாடெல்லாம் படுகிறது! இப்போது கடன் அடிபடையில் பிளாஸ்டிக் கூடைகளை பெற்றுக் கொடுக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தப் போகிறர்களாம்! இந்துத்துவ பாசிஸ்ட் நடிகர் சோ 70இல் ஒரு திரைப்படம் எடுத்தார் . அதன் பெயர் **முகமது பின் துக்ளக்**. அதில் துக்ளக் அரச பதவிக்கு வந்தபின், விமர்சிக்கும் மக்களை வாய் மூட வைக்க பல திட்டங்களை அறிவிப்பார். குடம் வழங்கு திட்டம் , யோசியம் பார்க்க கிளி வழங்கு திட்டம், மாடு கட்ட கயிறு வழங்கும் திட்டம் என்று பல முட்டாள்தனமான திட்டங்களை அறிவிப்பார் . அதே போன்று தான் இன்று நம் நாட்டு அரசியல் உள்ளதென்றது அனைவரும் அறிந்த விடயம். ஆனால் மூன்றாம் தர தமிழ் நாட்டு அரசியல்வாதிகள் கூட நினைத்து பார்க்க முடியாத துக்ளக் அரசாட்சியாக மாறி வருகிறது மஹிந்தரின் அரசு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கியூபாவின் நத்தார் தின பரிசு!




கியூபா அரசு நத்தார் தின நினைகாக 2900 அரசியல் கைதிகளை சிறையில் இருந்து விடுதலை செய்துள்ளது.

இந்த விடுதலையை குற்றவாளிகளின் குடும்பத்தினர் மற்றும் மதகுருமாருடன் இணைந்து பேசி நடாத்தியுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இவர்கள் அனைவரும் கியூபாவின் கம்யூனிஸ அரசின் இருத்தலுக்கு பங்கம் விளைவித்தோர் என்ற குற்றச்சாட்டில் கைதானவர்களாகும். அடுத்த ஆண்டு கியூபா நாட்டிற்கு பாப்பரசர் விஜயம் செய்ய குறிப்பிடத்தக்கது.

சத்தியசாய்பாபா கருணாநிதியை சந்தித்து கூவத்தை திருத்த 200 கோடி கொடுத்ததைப் போன்ற நிகழ்வு போலவே கியூபாவிற்குள்ளும் நடத்தலாம் என்ற என்னத்தோடும் பாப்பரசர் வரவு அமையலாம் என சில ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். பெரியாரின் கொள்கையில் வந்த கருணாநிதியின் மனைவி ராசாத்தி அம்மாள் சத்தியசாயி பாபாவின் காலில் நெடுஞ்சாண் கிடையாக விழுந்தது போல கம்யூனிச கியூபாவும் பாப்பரசர் காலில் விழும் எனவும், அந்த கண்கொள்ளா காட்சியை உலக கம்யூனிஸ்ட்டுகள் காண வாய்ப்புள்ளது எனவும் முதலாளித்துவம் எச்சில் வடித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு முன்னர் இரண்டாம் போப்பாண்டவர் கியூபாவுக்கு விஜயம் மேற்கொண்டதும் குறிப்பிடத்தக்கது.

## முதலாளித்துவத்தால் ஒழிக்கப்படும் இலவச கல்வயை பாதுகாப்போம் முண்ணுதாரணம் கியூபா~



அமெரிக்கா மற்றும் பிரிட்டன், இத்தாலி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளில் கல்விக்கட்டணங்கள் உயர்த்தப்பட்டு, நடுத்தர வகுப்பைச் சேர்ந்த மாணவர்களின் கல்விகூட கேள்விக்குறியாகியுள்ள நிலையில், கியூபாவில் தொடர்ந்து உயர்கல்வியையும் அனைவருக்கும் கிடைக்கும் ஒன்றாக மாற்றியுள்ளனர். இதுதான் தென் அமெரிக்காவில் அமைந்துள்ள இடதுசாரி அரசுகளுக்கு வழிகாட்டியாக உள்ளது.

கியூபா சின்னஞ்சிறிய நாடு. ஆனால் அதுபட்ட துயரமோ மிகப்பெரிது. ஸ்பெயின் நாட்டின் காலனியாக இருநூறு ஆண்டுகள் இருந்த நிலையில், ஜோஸ் மார்டி தலைமையில் புரட்சி மூலம் 1902-ஆம் ஆண்டில் விடுதலை பெற்றது. தலைவலி போய் திருகுவலி வந்த கதையாய், அமெரிக்காவின் மேலாதிக்கத்திற்கு உட்பட்டது. துவண்டுவிடாமல் உலக வல்லரசை எதிர்கொள்ளும் துணிவு மிக்க நாடு. அமெரிக்கா தொடுத்த நெருக்கடிகளுக்கு அடிபணியாது நிமிர்ந்து நிற்கும் நாடு. ஐம்பது ஆண்டுகட்கு மேலாக பொருளாதார முற்றுகையிட்டும் அடிபணியாதது மட்டுமின்றி, நேரிடையாகப் போரிட்டும் அமெரிக்கா வெற்றி பெற இயலாது ஒதுங்கிக் கொண்டுள்ளது கியூபா மக்களது வீரத்திற்கும், அதன் ஒப்பற்ற தலைவர்களது சீரிய தலைமைக்கும் சான்றாகும். பொம்மை அரசுகளை அமெரிக்கா, கியூபா மக்கள் மீது திணித்தது. பாடிஸ்டா என்ற கொடுங்கோலன் ஆட்சியில் மக்கள் பட்ட துயர் சொல்லி மாளாது.

கல்வியைத் தனியார்க்கு தாரை வார்த்தது மட்டுமின்றி, அரசுக் கல்விக்கூடங்கள் புறக்கணிக்கப்பட்டன. இது தானே நம் நாட்டில் இன்றைய நிலை. இருநூறு ஆண்டுகட்கு மேலான ஹவானா பல்கலைக் கட்டிடம் தரைமட்டமாக்கப்பட்டு, அவ்விடத்தில் ஹெலிகாப்டர் தளத்தை நிறுவினான் பாடிஸ்டா. சுதந்திர தாகம் எடுத்த கியூபா மக்களால் சே குவேரா வழிகாட்டுதலில் பிடல் காஸ்ட்ரோ தலைமையில் புரட்சி வழியே 1959-ஆம் ஆண்டில் மக்களாட்சி நிறுவப்பட்டது.

புரட்சி அரசு கல்வி சீர்திருத்தத்திற்கு முதலிடம் கொடுத்தது. அருட்தந்தை ஜோஸ் அகஸ்டின் கபல்லரோவும் அவரது சீடர் அருட்தந்தை பெலிக்ஸ் வரேலாவும் பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே கியூபக் கல்வி முறையையொட்டி பல திட்டங்களைத் தீட்டியிருந்தனர். அவற்றையும், பாலோ ப்ரையரே வகுத்த தர்க்கவழிக் கல்விமுறையையும் ஒருங்கிணைத்து புதிய கியூபக் கல்வித் திட்டம் வகுக்கப்பட்டது. எழுத்தறிவு இயக்கத்தின் மூலம், இரண்டே ஆண்டுகளில் அனைவரும் கற்றவர் என்ற நிலையை உருவாக்கி, யுனெஸ்கோவின் சான்றிதழும் பெற்று உலக சாதனை படைத்தது புரட்சி அரசு

(தொடரும்...)

# மக்களின் மகாத்தான ஆதரவுடன் வெனிசூலாவின் புதிய பயணம்



ஜனாதிபதியாக ஒருவர் எத்தனை முறை இருக்க முடியும் என்ற வரையறை நீக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தி வெனிசுலா தலைநகர் காரகஸில் மாபெரும் மக்கள் பேரணி நடைபெற்றது.

சாவேஸின் சோசலிசப் புரட்சி நிறைவடைய வேண்டும் என்றால் இந்த வரையறை நீக்கப்பட வேண்டும் என்று பேரணியில் முழக்கங்கள் எழுப்பப்பட்டன. அரசியல் சட்டத்தில் உரிய திருத்தத்தை கொண்டு வருவதற்கு முன் ஞாயின்று மக்கள் வாக்கெடுப்பு நடைபெறவுள்ளது.

பேரணியின் ஊடே சிறப்பு வண்ண வாகனத்தில் சாவேஸ் சென்ற போது, மக்களின் ஆரவாரக் கூச்சல் வானைப் பிளந்தது. ஒலிபெருக்கிகளில் எழுந்த சல்சா இசைக்கேற்ப மக்கள் நடனம் ஆடினர். சாவேஸ் பேசத் தொடங்கியவுடன் ஊசி விழுந்தால் கூட ஒலி எழும் அளவுக்கு அமைதி நிலவியது.

"எனக்கு இன்னும் நான்காண்டுகள் உள்ளன. இந்த திருத்தம் நிறைவேறினால் இந்த நூற்றாண்டில் மாபெரும் முன்னேற்றம் ஏற்படும்" என்று சாவேஸ் தம் உரையில் குறிப்பிட்டார்.

அவருக்கு நன்றி

"அவரால் எங்களுக்கு எல்லாம் கிடைத்தது. அவருக்கு நன்றி" என்று இரண்டு குழந்தைகளுக்கு தாயான கிரேகா ரியா எஸ்கலே?னா கூறினார். சாவேஸின் சமூகத் திட்டங்களால் குழந்தைகள் வயிறார உண்கின்றன. சாவேஸ் பதவி இழந்தால் இத்திட்டங்கள் முடிந்து விடும் என்று அவர் நம்புகிறார். சாவேஸின் திட்டம் வெனிசூலாவுக்கு மட்டுமல்ல முழு உலகத்து உழைக்கும் மக்களுக்கும் அவசியமென பேரணியில் கலந்து கொண்டவர்கள் கோஷமிட்டனர்.

# சிரியா கலவரத்தின் பின்னணியில் அமெரிக்கா

## – விக்கி லீக் அதிர்ச்சி தகவல்!

அரபு நாடுகளில் ஒன்றான சிரியாவில் நடக்கும் ஆட்சிக்கு எதிரான போராட்டத்துக்கு அமெரிக்காவே காரணம் எனவும் அமெரிக்கா சிரிய போராட்டத்துக்குப் பண உதவி செய்வதாகவும் விக்கி லீக்ஸ் அதிர்ச்சிகர செய்தி வெளியிட்டுள்ளது.

அரபு நாடான சிரிய்ாவில் அதிபர் பாஷார் அல்- ஆஷாத்துக்கு எதிராக போராட்டம் நடந்து வருகிறது. துனீஷியா, எகிப்து போராட்டங்களைத் தொடர்ந்து கடந்த மாதம் 18-ந்தேதி தொடங்கிய சிரியா போராட்டம் தற்போது வலுவடைந்துள்ளது.

போராட்டத்தை ஒடுக்க சிரிய ராணுவம் துப்பாக்கி சூடு நடத்தியது. இதில் 8 பேர் பரிதாபமாக பலியாகினர். அவர்களின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து சிரியாவில் போராட்டம் வலுவடைந்துள்ளது. இந் நிலையில், "சிரியாவில் போராட்டம் நடக்க அமெரிக்காவே காரணம்" என விக்கி லீக் இணைய தளம் தகவல் வெளியிட்டுள்ளது. அமெரிக்க தூதரகங்களின் ரகசிய ஆவணங்களை வெளியிட்டு அமெரிக்காவின் சட்டவிரோத செயல்ப்பாடுகளை வெளிப்படுத்திவரும் விக்கிலீக் இணையதளம் சமீபத்தில் சிரியா குறித்த தகவல்களையும் வெளியிட்டுள்ளது. அதில், "சிரியாவில் கலவரத்தைத் தூண்ட எதிர்க்கட்சி தலைவர்களுக்கு அமெரிக்க முன்னாள் அதிபர் ஜார்ஜ் புஷ் பண உதவி செய்தார். அத்துடன் சிரிய அதிபருக்கு எதிரான மக்கள் போராட்டத்தை ஒளிபரப்ப லண்டனைத் தலைமையகமாக கொண்டு இயங்கும் ஒரு தனியார் தொலைக்காட்சிக்கும், புஷ் அரசு பண உதவி அளித்தது.




அதற்காக புஷ் மொத்தம் ரூ.30 கோடி வழங்கியுள்ளார். இதைத் தொடர்ந்து கடந்த 2009-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் அந்த தனியார் தொலைக்காட்சி சிரியாவில் தனது ஒளிபரப்பைத் தொடங்கியது. அதன் எதிரொலியாகத்தான் தற்போது அங்கு கலவரம் உச்சக்கட்டத்தை எட்டியுள்ளது. மேலும், இதற்கான ஒப்பந்தம் அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ்சுக்கும், சிரியா எதிர்க்கட்சி தலைவருக்கும் இடையே கடந்த 2005-ம் ஆண்டு டமாஸ்கஸ்சில் ஏற்பட்டது.

அவரது ஆட்சியில் வழங்கப்பட்டு வந்த நிதி உதவி ஒபாமாவின் ஆட்சியிலும் தொடர்கிறது. ஒருபுறம் கலவரத்தைத் தூண்டிக் கொண்டே மறுபுறம் சிரியாவுடன் உறவைப் பலப்படுத்துவது போன்று அமெரிக்கா நடிக்கிறது. கடந்த 6 வருடத்தில் கடந்த ஜனவரி மாதம்தான் முதன் முதலாக சிரியாவுக்கான தூதரை அமெரிக்கா நியமித்தது." என தெரிவிக்கப்பட்டுள்ளது. விக்கிலீக்ஸின் இப்புதிய தகவல் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இரகசிய குறியீடு மாற்றத்தால் சிக்கலில் தென்கொரியா



வடகொரியாவின் தலைவர் கிம் ஜாங் இல்லின் மரணத்திற்குப் பின், தென்கொரியா உளவு பார்த்து வருவதால், அதைத் தடுக்கும் வகையில், தகவல் பரிமாற்றங்களில் ரகசிய குறியீடுகளை, வடகொரியா மாற்றியுள்ளது.

வடகொரிய தலைவர் கிம் ஜாங் இல் மறைந்த பின், அந்நாட்டில் நடக்கும் அரசியல் மாற்றங்கள் குறித்து அறிந்து கொள்ள, தென் கொரியா அதிக ஆர்வம் காட்டி வருகிறது. அதற்காக, தென் கொரிய உளவுத் துறை முடுக்கி விடப்பட்டுள்ளது. கிம் ஜாங் இல் மரணம் அடைந்த செய்தி கூட உடனடியாக, வெளியுலகுக்குத் தெரிந்து விடாதபடி, வடகொரியாவின் உளவுத் துறை செயல்பட்டதைக் கண்டு, தென் கொரியா அதிர்ச்சியில் உறைந்திருந்தது. அதன் பின் தான், தென் கொரிய உளவுத் துறை, வடகொரியாவை உளவு பார்ப்பதில் அதிக வேகம் காட்டி வருகிறது.

மேலும், கிம் ஜாங் இல் இறந்தவுடன், பல்வேறு இடங்களில் பயிற்சிகளில் ஈடுபட்டு வந்த ராணுவத்தினரை உடனடியாக, பயிற்சிகளைக் கைவிட்டு தங்கள் தளங்களுக்குத் திரும்பும்படி, புதிய தலைவர் கிம் ஜாங் உன் முதன் முதலாக உத்தரவு பிறப்பித்ததாக, தென் கொரிய ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டிருந்தன. இந்த உத்தரவு ரகசிய குறியீடுகளாக, கம்பியில்லா தந்திகள் மூலம் ராணுவத்தினருக்கு அனுப்பப்பட்டிருந்தது. இந்தக் குறியீடுகளை, தென் கொரிய ராணுவம் கண்டுபிடித்து, தகவலை அறிந்து கொண்ட பின் தான், தென் கொரிய ஊடகங்களில் கிம் ஜாங் உன்னின் முதல் உத்தரவு பற்றிய தகவல்கள் வெளிவந்தன.

இதையடுத்து, தற்போது வடகொரியா தனது உளவு மற்றும் ராணுவத் தகவல்களுக்கான ரகசியக் குறியீடுகளை மாற்றி அமைத்துள்ளது. இதனால், தென் கொரியா உளவு பார்ப்பதில், மேலும் பல சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரவு – செலவு திட்டத்திற்கு எதிராக ஜே.வி.பியின் ஆர்பாட்டம்



ராஜபக்ஷ அரசின் வரவு- செலவு திட்டத்திற்கு எதிராக ஜே.வி. பியால் நாடளாவிய ரீதியில் ஏற்பாடு செய்யப்பட்ட எதிர்ப்பு ஆர்பாட்டத்தின் ஒரு கட்டமாக கடந்த 2011.டிசம்பர் 04ம் திகதி கிரிபத்கொடை நகரமத்தியில் இடம்பெற்றது.

அதில் பா.உ. தோழர் விஜித ஹேரத், சுனில் ஹந்துன்நெத்தி உட்பட பல மக்கள் விடுதலை முன்னணி மக்கள் பிரதிநிதிகளும் பெரும்பாலான மக்களும் கலந்துகொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தின் போது கருத்து தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணியின் பிரச்சார செயலாளர் தோழர் விஜித ஹேரத் , தற்போது எரிபொருள் விலை அதிகரிக்கப்பட்டுள்ளதால் அனைத்து அத்தியாவசிய பொருட்களின் விலைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது. நாட்டு மக்கள் மிகவும் இக்கட்டான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அது மட்டுமன்றி வரிச்சுமை மற்றும் கடன்சுமையும் மக்களின் மீது சுமத்தப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையிலேயே அரசு மக்களை ஏமாற்றி மக்களுக்கு மேலும் சுமையை சுமத்தும் வரவு- செலவு திட்டத்தை சமர்பிக்கின்றனது. எனவே இதற்கு எதிர்ப்பு தெரிவித்து மக்கள் விடுதலை முன்னணியினால் நாடளாவிய ரீதியில் கண்டன ஆர்பாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பா.உ. தோழர் சுனில் ஹந்துன்நெத்தி கருத்து தெரிவிக்கையில் உழைக்கும் மக்கள், பெண்கள், வேலையற்ற இளைஞர், யுவதிகள், விவசாயிகள், மீனவர்கள் உட்பட அனைத்து மக்களின் பிரச்சினைகளை தீர்க்க முடியாத ராஜபக்ஷவின் வரவு- செலவு திட்டத்துக்கு மட்டுமன்றி இந்த முதலாளித்துவ ஆட்சியை தோற்கடித்து மக்கள் சார்பான புதியதோர் பொருளாதார முறையையும், சமுதாய முறையையும் கொண்டுவருவதற்காக மக்கள் அணித்திரள வேண்டும் எனவும் சுட்டிக்காட்டினார்.

## ஜே.வி.பி யின் எதிர்ப்பு பேரணியில் மக்கள் வெள்ளம்




அரசின் 2012 வருடத்திற்கான ஏமாற்றுமிக்க வரவு- செலவு திட்டத்துக்கும், ஜனநாயக விரோத ஆட்சிக்கு எதிராகவும் நாடலாவிய ரீதியில் நடாத்திய கண்டன ஆர்ப்பாட்டத்தின் இன்னொரு கட்டமாக மக்கள் விடுதலை முன்னணியால் ஏற்பாடு செய்யப்பட்ட மாபெரும் கண்டன பேரணி கடந்த 14ம் திகதி கொழும்பில் நடாத்தப்பட்டது. பொரளை கம்பெல் மைதானத்தில் ஆரம்பித்து கோட்டை புகையிரத நிலயத்தின் எதிரில் நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் கூட்டத்துடன் முடிவுற்றது.

அரசாங்கம் தொடர்ச்சியாக மக்கள் மீது சுமத்தும் வரிச் சுமைக்கு எதிராகவும், அத்தியாவசிய பொருட்களின் விலை அதிகரிப்புக்கு எதிராகவும், ஊடக அடக்கு முறைக்கு எதிராகவும், ஆட்கடத்தல் மற்றும் பொய்க் குற்றச்சாட்டுக்களை சுமத்தி சிறையிலடைப்பதற்கு எதிராகவும், ஜனநாயகத்திற்கு விரோதமாக செயல்படுவதற்கு எதிராகவும் ஆர்பாட்டத்தின்போது கோஷங்கள் எழுப்பப்பட்டது.

## பெண்களின் உரிமைகளை பாதுகாப்போம்

பெண்கள் மீதான அடக்குமுறை மற்றும் பெண்களுக்கான பாதுகாப்பு யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு உடன் தீர்வை வழங்க அரசாங்கம் முன்வர வேண்டுமென உரிமைகளுக்காக பெண்கள் அமைப்பு வேண்டுகோள் விடுக்கும் ஊடக மாநாடு கொழும்பு நிப்பொன் ஹோட்டலில் நடைபெற்றபோது தோழி போல் உறையாற்றுவதையே படத்தில் காண்கிறீர்கள்.




# வடக்கில் வசந்தமாம்!

யாழ்.மாவட்டத்தில் 2011 ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து டிசெம்பர் 20ஆம் திகதி வரையில் 36 தற்கொலை மரணங்கள் நடைபெற்றுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலை மரண பதிவு மற்றும் மரணங்கள் தொடர்பான விசராணை அறிக்கையின் புள்ளிவிபரத் தரவுகள் குறிப்பிடுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ். போதனா வைத்தியசாலையில் தற்கொலை மரணங்கள் தொடர்பான பதிவுகளின் படி 24 பெண்களும் 12 ஆண்களும் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக அந்தப் புள்ளிவிபரத் தரவு அறிக்கை மேலும் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலையின் தற்கொலை மரண அறிக்கையின் பிரகாரம் இளவயது குடும்பத்தினர் அதிகமாக இருப்பதாகவும், இவர்களின் குடும்பங்கள் பொருளாதார ரீதியில் பின்னடைவுகளை எதிர்நோக்கியதாகவும் குடும்பப் பிணக்கு அல்லது மன அழுத்தம், தாங்க முடியாத அதிர்ச்சி, எதிர்காலம் பற்றிய நம்பிக்கையின்மை, விரக்தி போன்ற காரணங்களாக இவர்களின் தற்கொலை அமைந்திருக்கலாம் என தற்கொலைக்குப் பின்னரான மரண விசாரணை அறிக்கை குறிப்பிடுவதாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யானை பசிக்கு சோளப்பொரி

**– சோஷலிஸ மகளிர் சங்கம் குற்றச்சாட்டு**

பெண்கள் ஆகிய நாம் இன்று தாங்க முடியாத வாழ்க்கை சுமையை எதிர்கொண்டுள்ளோம். கடந்த 2011 வரவு- செலவு திட்டம் சமர்பிக்கப்பட்டப்போது 400கிராம் பால்மா பக்கட்டின் விலை 264.00 ரூபாவிலிருந்து 284.00 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது. அதன் பின் இன்னும் அதிகரிக்கப்பட்டது. இதுமட்டுமன்றி அத்தியாவசிய பொருட்கள் அனைத்தினதும் விலைகள் துரிதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஐந்து பேர் கொண்ட குடும்பத்திற்கு மாதாந்த செலவு 42,500 ரூபா தேவைப்படுவதாக அரசாங்கமே கூறுகின்றது. ஆனால் மக்களின் வருமானம் உயர்த்தப்படவில்லை. அதனால் பெண்களே மிகவும் இன்னல்களுக்கு முகங்கின்றனர்.




வடகிழக்கில் மட்டும் விதவைகள் 90,000க்கும் மேற்பட்டோர் உள்ளனர். மிகவும் துயரநிலைகளுக்கு முகம்கொடுக்கும் இவர்கள் எவ்வாறு தமது பிள்ளைகளை கவனிப்பது? இவர்களுக்காக சமூக பாதுகாப்பு நிதியத்தை நிறுவுவதாக அரசு கூறினாலும் இதுவரையும் அது நடைமுறையில் இல்லை. 2011 வரவு- செலவு திட்டத்தில் முன்பள்ளி கல்விக்காக ஒதுக்கப்பட்டாலும் அதில் எந்தவித பிரியோசனையையும் மக்களுக்கு போய்ச் சேரவில்லை 2012ம் வருடத்திற்கு முன்பள்ளி திட்டத்திற்கு ஒரு சதத்தையேனும் வரவு- செலவு திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை.

இவ்வாறான அனைத்து பிரச்சினைகள் மத்தியில் இந்நாட்டு சிங்கள, தமிழ், முஸ்லிம் என்ற வேறுபாடின்றி பெண்கள் பாரிய இன்னல்களுக்கு முகம்கொடுக்கின்றனர்.

இந்நிலைமைகளை நன்கு உணர்ந்து பெண்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக சோஷலிச மகளின் சங்கத்துடன் அணிதிரளும்படி நாம் இந்நாட்டு அனைத்து மகளிரடமும் வேண்டுகோள் விடுக்கின்றோமென 2011.டிசம்பர்.05ம் திகதி மக்கள் விடுதலை முன்னணியின் தலமையகத்தில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டின் போது சோஷலிச மகளிர் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் தோழி சமன்மலீ குணசிங்க தெரிவித்தார். மாநாட்டில் தோழி கிருஷ்னன் கலைசெல்வியும் கலந்துக்கொண்டார்.

# பரீட்சை குளறுபடி அரசாங்கத்தின் இயலாமையே

**– ஜே.வி.பி குற்றச்சாட்டு –**




உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பிலான ஜனாதிபதி அமைக்கும் விசாரணைக் குழு அர்த்தமற்றதென தெரிவித்துள்ள ஜே.வி.பி அது காலத்தை விரயமாக்குகின்ற செயற்பாடாகும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளது.

மூன்று இலட்சம் மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு பேராசிரியர்கள் மற்றும் புலமையுள்ள ஆசிரியர்கள் கொண்ட சபையொன்றை அமைத்து பரீட்சை பெறுபேறுகளில் இடம்பெற்றுள்ள குளறுபடிகளுக்கு உண்மையான தீர்வு கண்டு சரியான பெறுபேறுகளை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளது.

ம.வி.முன்னணியன் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மக்கள் விடுதலை முன்னணி செயலாளர் தோழர் ரில்வின் சில்வா இதனைத் தெரிவித்தார். இடம்பெற்றுள்ள தவறுகளுக்கு அதிகாரிகளின் மீது பழி சுமத்திவிட்டு தப்பித்துக்கொள்ளும் நோக்கிலேயே அமைச்சர்கள் செயற்பட்டு வருவதாகவும்,

அத்துடன் கல்வித்துறையில் அரசியல் புகுந்திருப்பதே அதன் நிர்வாக சீர்கேட்டுக்கும் வழி வகுத்திருக்கின்றது என்றும் குற்றம் சுமத்தியது..

,யஇல 198/19 கொழும்பு 10ல் வசிக்கும் டில்வின் சில்வா அகிய என்னால் இல 43/43 வலவுவத்த வீதி தெல்கந்த நுகேகொடை சரளா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org